# சந்திரனை 10 மைல் தூரத்தில் சுற்றி மனிதன் இறங்கும் இடத்தை தேர்ந்தெடுப்பர்

Registered as a Newspaper in Ceylon    வார மலர் ★ ★ விலை சதம் 20




ஈழநாடு
EELA NADU

**அறிவித்தல்**

மில்க்வைற் நீலசோப் 50 மேலுறைகளைக் கொடுத்து ஓர் அழகான திருவள்ளுவர் படத்தை 31-5-69க்கு முன்பு பெற்றுக்கொள்ளலாம் என்பதை அன்புடன் அறியத் தருகின்றோம்.

மில்க்வைற் சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.

மலர் 11    சௌமிய வைகாசி 10    ரபி;அவ் 6    (23-5-69)    வெள்ளிக்கிழமை    இதழ் 101

## அப்பலோ வீரர்கள் நடத்தும் பயங்கர சோதனை

கேப்கென்னடி மே 22

சந்திரமண்டலப் பாதையில் ஏழாவது முறையாக வலம் வந்து கொண்டிருக்கும் அப்பலோ—10 விண்வெளிவீரர்கள் இன்று நள்ளிரவுக்குச் சற்றுப் பின்னதாக ஆபத்து நிறைந்த அதிமுக்கியமான ஒத்திகையை நடாத்துவார்கள்.

விண்வெளி வீரர்களான ஸ்டாபோர்டும், ஷெர்னனும் அப்பலோ-10 லிருந்து பிரிந்து துணைராக்கெட் ஒன்றில் நிலாவாகனத்துக்குள் வருவர். இதன்பின்னர் நீள்வட்டமான பாதையில் இவர்கள் கலத்தைச் செலுத்தி சந்திரனைப் பத்து மைல் தூரத்தில்வலம்வந்து பின்னர் நாளை காலை தனித்துப் பயணம் செய்யும் வீரர் 'யங்'கின் தாய்க்கலத்துடன் இணைவர்

இன்று நள்ளிரவுக்குச் சற்றுப் பின்னதாக நடக்கவிருக்கும் இந்த அதிபயங்கர, முக்கிய சோதனையின் போது மனிதன் சந்திரனில் இறங்குவதற்கான இடத்தை விண்வெளிவீரர்கள் தேர்ந்தெடுப்பார்கள்.

## வடபகுதி பௌத்த பாடசாலைகள் பிரச்னை

# 'தாய் மொழியே போதனா மொழி; எதிர்த்து வழக்காடவும் தயார்'

## கல்வி அமைச்சின் அறிக்கைக்கு தமிழ் காங்கிரஸ் தலைவர் பதில்

— நமது நிருபர் பெரி. சுந்தரலிங்கம் —

கொழும்பு, வியாழன்

சட்டத்தின்படிதமிழ்க் குழந்தைகளுக்கும், சிங்களக்குழந்தைகளுக்கும் அவர்களின் தாய்மொழியே போதனாமொழியாக இருக்க வேண்டும். பெற்றோர்களின் விருப்பப்படி போதனாமொழி விஷயத்தில் எவ்வித மாற்றமும் செய்யமுடியாது. இதனை மீறி பெற்றோர் விருப்பப்படியேபோதனாமொழியாக்கப்பட்டால் அதனை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்காடவும் தயாராகவிருக்கிறேன்" என்று தமிழ்காங்கிரஸ் தலைவரும், யாழ்ப்பாணம் எம். பி.யுமான திரு ஜி ஜி. பொன்னம்பலம் இன்று நமது நிருபரிடம் தெரிவித்தார்.



அடுத்தமாதம் 1-ம் திகதி அரசாங்கம் பொறுப்பேற்கவிருக்கும் பௌத்த பாடசாலைகளில் 'இப்போதைக்கு' தமிழே போதனாமொழியாக இருக்குமென கல்வி அமைச்சு வெளியிட்ட அறிக்கை சம்பந்தமாக அவர் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

இது சம்பந்தமாக அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

"அரசாங்கம் பொறுப்பேற்கவிருக்கும் வடபகுதி பௌத்த பாடசாலைகளில் தமிழே போதனாமொழியா[illegible] இருக்குமென இன்று கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலிருந்து நாங்கள் பிரதம[illegible]ம் எடுத்துக் கூறிய க[illegible] [illegible] ளப்பட்டுள்[illegible] [illegible] றோம். நாங்கள் கேட்டுக் [illegible]

லைக்கழகம்வரை தாய்மொழி மூலமே கல்விகற்பிக்கப்பட வேண்டுமெனச் சிபார்சு செய்துள்ளது.

1951-ம் ஆண்டு கல்விச் சட்டத்தை நாம் ஆராய வேண்டும். அதாவது அப்போது தமிழ், சிங்களக்குழந்தைகளுக்கு தாய்மொழியே போதனா மொழி என்பதை போதனாமொழிபற்றிய 4-ம் விதி கூறுகிறது. இவ்விதியின் முக்கிய கருத்து என்னவென்றால் தமிழ், சிங்களக்குழந்தைகளுக்கு தாய்மொழியிலேயே கல்வி கற்பிக்க வேண்டுமென்பதாகும். ஏதாவது ஒரு பாடசாலையில் மிகக் குறைந்த தொகையுள்ள[illegible] தமிழ் அல்லது சிங்களக் குழந்தைகள் இருந்தால் போதனாமொழி விஷயத்தில் என்னசெய்யலாம்? 15 சிங்களக் குழந்தைகளோ அன்றி 15 தமிழ்க் குழந்தை [illegible] அப்பாடசாலையி[illegible] இருந் [illegible] போதனாமொழி தாய்மொழியாகத்தான் இருக்க [illegible]

ளின் போதனாமொழியை நிர்ணயிக்கும் உரிமை பெற்றோர்களுக்கு உண்டு என கல்விச் சட்டம் கூறுகின்றது.

இதனை ஆராயும்பட்சத்தில் குறிப்பிட்ட விதி அரசாங்கம் பொறுப்பேற்கவிருக்கும் வடபகுதியிலுள்ள பௌத்த பாடசாலைகளுக்குப் பொருந்தாது என்பது தெளிவாகத் தெரிந்த விஷயம். ஏனெனில் அங்கு கல்வி பயிலும் பிள்ளைகள் எல்லாரும் தமிழ்ப் பிள்ளைகளாவார்கள். அவர்களின் போதனாமொழியை சட்டப்படி தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்றோர்களுக்குக் கிடையாது. அவர்கள் போதனாமொழி தாய்மொழியாக இருக்கவேண்டுமென சட்டமே கூறுகின்றது.

எதிர்காலத்தில் கூட வடபகுதி பௌத்த பாடசாலைகளின் போதனாமொழியை பெற்றோர்கள் விருப்பப்படி மாற்றம் செய்ய முடியா [illegible]

## "சைவமும் தமிழும் வளர்ப்பதில் ஈழத்தமிழர்களே முன்னிற்கின்றனர்" சேக்கிழார் விழாவில் அறிஞர்கள் கருத்து

யாழ்ப்பாணம், வெள்ளி

"இன்றைய உலகில் சமய நூல்களைப் படிப்போர் தொகை மிக மிகக் குறைவாக அருகி வருகின்றது. இந்த நிலை மாற வேண்டும். சமய நூல்களைப் படித்தாலும் அதன் வழி ஒழுகுவோர் தொகையும் கூட அருகியே வருகின்றது. சமய நூல்களைக் கற்று, அதன் சக்தியான வேதம், ஆகமங்களைப் பயின்று ஆண்டவன் பாதங்களை அடைவதற்கு நற்றொண்டாற்ற இன்றைய இளைஞர்கள் சமுதாயம் முன்வர வேண்டும்."

நேற்று ஆரம்பமான சேக்கிழார் விழாவில் சொற்பொழிவாற்றிய திரு. மு. ஞானப்பிரகாசம் இவ்வாறு தெரிவித்தார்.

அகில இலங்கைச் சேக்கிழார் மன்றத்தின் நான்காவது ஆண்டு விழாவில் நேற்றைய காலை நிகழ்ச்சிகள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிப் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெற்றன.

கயப்பாக்கம் சித்தாந்த வித்தகர் திரு. மு. சோமசுந்தரம் செட்டியார் பேசுகையில் தெரிவித்ததாவது:-

சேக்கிழார்பெருமான் ஒரு

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, வியாழன்

இன்று இழுக்கப்பட்ட தேசிய லொத்தர் சபையின் 247 சுவீப் சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு:-

**முதல் பரிசு**

03 C 0441 ரூ. 98,230

**இரண்டாம் பரிசு**

30 S 0139 ரூ. 39,292

**மூன்றாம் பரிசு**

06 N 0576 ரூ. 9,823

ரூ 491-15 சதம் பரிசுகள் பெறும் 100 டிக்கட்டுகள் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 38 V 0867 | 21 H 0508 |
| 36 P 0031 | 35 Z 0439 |
| 37 Y 0511 | 17 O 0661 |
| 30 O 0599 | 04 W 0021 |
| 13 G 0074 | 28 M 0501 |
| 14 H 0029 | 34 R 0052 |
| 05 Y 0226 | 37 P 0508 |
| 39 Y 0823 | 16 N 0478 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்காங்கிரஸ் தலைவரும், யாழ்ப்பாணம் எம். பி.யுமான திரு ஜி ஜி. பொன்னம்பலம் இன்று நமது நிருபரிடம் தெரிவித்தார்.

கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலிருந்து நாங்கள் பிரதமரிடம் எடுத்துக் கூறிய க[...]துக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக அறிகிறோம். நாங்கள் கேட்டுக்கொண்டதும் இதுவேதான். ஆயினும், கல்வி அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள மூன்றுவசனங்கள் எதிர்காலத்தில் பிரச்னையைக் கிளப்ப கூடியதாக உள்ளன''.

''இப்போதைக்குப் போதனமொழி தமிழ் மொழியாக இருக்கும் என்றும், போதனமொழியில் மாற்றம் ஏற்பட வேண்டுமெனப் பெற்றோர் விரும்பினால் போதனமொழி விஷயத்தில் இப்போதுள்ள சட்டத்தின் அடிப்படையில் அது தீர்மானிக்கப்படும் என்றும், ஆனால்நடைமுறை சாத்தியம் பற்றி ஆலோசிக்கப்படுமென்றும் கல்வி அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விஷயங்கள் எதிர்காலத்தில் பிரச்னையைக் கிளப்பக்கூடியதாக உள்ளது.

இப்போது அமுலில்உள்ள சட்டம் பற்றி பூரணமாக விளங்கவேண்டுமானால், 25 ஆண்டுகளுக்கு முன்னிருந்த நிலைமையை ஆராயவேண்டும். 1943-ம் ஆண்டு நிறுவப்பட்ட கல்வி பற்றிய விசேஷகுழு தாய்மொழியே போதனமொழியாக இருக்க வேண்டுமெனச் சிபார்சு செய்துள்ளது. அதன் பின்னர் 1945-ல் நியமிக்கப்பட்ட மற்றொரு குழு முன்னைய குழுவின் சிபார்சை ஏற்றுக்கொண்டு ஆரம்ப பாடசாலையிலிருந்து பல்க

அல்லது சிங்களக் குழந்தைகள் இருந்தால் போதனமொழி விஷயத்தில் என்னசெய்யலாம்? 15 சிங்களக் குழந்தைகளோ அன்றி 15 தமிழ்க் குழந்தைகளோ அப்பாடசாலையி[ல்] இருந்தால் போதனமொழி தாய்மொழியாகத்தான் இருக்க வேண்டும். இந்தத்தொகைக்குக் குறைவாக குழந்தைகள் இருக்கும் பட்சத்தில் அக்குழந்தைக

யாக இருக்கவேண்டுமென சட்டமே கூறுகின்றது.

எதிர்காலத்தில் கூட வட பகுதி பௌத்த பாடசாலைகளின் போதனமொழியை பெற்றோர்கள் விருப்பப்படி மாற்றம் செய்ய முடியாதென்பது மேற்காட்டிய விளக்கங்களிலிருந்து தெளிவாகிறது.



திருக்கேதீச்சர குறவஞ்சி நாட்டிய நாடகத்தில் குறத்தியாக வரும் செல்வி சாந்தா பொன்னுத்துரையின் ஒரு தோற்றம் இது.



திருக்கேதீச்வரக் குறவஞ்சி நர்ட்டிய நாடகம் இம்மாதம் 28, 29-ந் திகதிகளில் யாழ். நகர மண்டபத்தில் நடைபெற விருக்கிறது. இந் நாட்டிய நாடகத்தைத் தயாரித்தளிக்கும் செல்வி சிவகுமாரி இராசையா இவர்தான்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 38 | V | 0867 | 21 | H | 0508 |
| 36 | P | 0031 | 35 | Z | 0439 |
| 37 | Y | 0511 | 17 | O | 0661 |
| 30 | O | 0599 | 04 | W | 0021 |
| 13 | G | 0074 | 28 | M | 0501 |
| 14 | H | 0029 | 34 | R | 0052 |
| 05 | Y | 0226 | 37 | P | 0508 |
| 39 | Y | 0823 | 16 | N | 0478 |
| 04 | H | 0493 | 38 | C | 0998 |
| 07 | V | 0190 | 33 | T | 0935 |
| 26 | Y | 0229 | 34 | K | 0061 |
| 13 | H | 0491 | 13 | W | 0587 |
| 30 | W | 0958 | 04 | R | 0691 |
| 10 | U | 0777 | 19 | R | 0797 |
| 26 | F | 0621 | 19 | J | 0480 |
| 34 | S | 0595 | 36 | S | 0834 |
| 18 | Z | 0698 | 31 | L | 0781 |
| 14 | M | 0006 | 05 | R | 0850 |
| 28 | Q | 0744 | 03 | F | 0330 |
| 37 | Q | 0464 | 18 | C | 0272 |
| 40 | V | 0247 | 08 | J | 0122 |
| 26 | Z | 0207 | 07 | P | 0122 |
| 05 | Y | 0207 | 03 | S | 0164 |
| 23 | G | 0252 | 16 | X | 0769 |
| 01 | V | 0112 | 13 | V | 0289 |
| 17 | A | 0919 | 34 | M | 0703 |
| 34 | F | 0111 | 28 | P | 0777 |
| 33 | W | 0615 | 32 | E | 0504 |
| 21 | M | 0522 | 23 | F | 0161 |
| 23 | J | 0111 | 36 | J | 0299 |
| 34 | A | 0004 | 24 | E | 0577 |
| 25 | Q | 0516 | 02 | V | 0813 |
| 25 | L | 0791 | 18 | E | 0842 |
| 03 | J | 0239 | 06 | J | 0324 |
| 35 | O | 0762 | 02 | T | 0868 |
| 38 | M | 0236 | 06 | K | 0970 |
| 26 | W | 0450 | 06 | K | 0379 |
| 38 | C | 0892 | 23 | E | 0518 |
| 14 | P | 0041 | 31 | U | 0082 |
| 36 | V | 0757 | 14 | L | 0939 |
| 06 | J | 0578 | 01 | T | 0869 |
| | | | 30 | O | 0344 |
| 26 | Y | 0531 | 03 | V | 0649 |
| 34 | Y | 0835 | 24 | M | 0428 |
| 22 | Y | 0555 | 17 | J | 0304 |
| 20 | N | 0848 | 12 | J | 0819 |
| 11 | L | 0394 | 19 | A | 0088 |
| 08 | P | 0570 | 39 | E | 0464 |
| 08 | B | 0993 | 10 | E | 0073 |
| 15 | Z | 0019 | 02 | P | 0891 |
| | | | 40 | M | 0622 |

(இவை உறுதிப்படுத்தப் படவேண்டியவை

கல்லூரிப் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெற்றன.

கயப்பாக்கம் சித்தாந்த வித்தகர் திரு. மு. சோமசுந்தரம் செட்டியார் பேசுகையில் தெரிவித்ததாவது:-

சேக்கிழார்பெருமான் ஒரு உரையாசிரியர், ஒரு பேராசிரியர். ஒரு போதனாசிரியர், ஒரு ஞானாசிரியர். இவரைப் போன்ற நால்வகைச் சிறப்பும் பெற்ற ஒருவர் இதற்கு முன்னரும் பிறக்கவில்லை. இப்போதும் இல்லை. இனியும் பிறக்க முடியாது.

நம் நாட்டு மக்கள் வாழ் வாங்கு வாழவேண்டுமென்பதை எடுத்துக்காட்டுவன 12 திருமுறைகளாகும். முதல் 11 திருமுறைகளையும் நம்பியாண்டார் நம்பி எடுத்துக் கூறியுள்ளார். 12 ம் திருமுறை பெரியபுராணம் தான் என்று இங்கு நான் கூறப் பெருமையடைகின்றேன்.

இந்தியாவிலும் பார்க்கத் தமிழும் சைவமும் வளர்ப்பதில் இலங்கைத்தமிழர்களே ஆயிரம் மடங்கு கூடிய கவனம் செலுத்துகின்றார்கள்.

இது நாவலர் பிறந்த இடம், நாவலர் வளர்ந்த இடம், நாவலர் தமிழ் வளர்த்தஇடம், எனவே இங்குள்ள மக்கள் நாவலர் வழி நின்று வாழ்வது அவரது பாதையைத் தொடருவதாகும்.

(கா. நி)

## மண்டைதீவு இசைவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி

மண்டைதவு சிறுப்புலம் கந்தசாமி கோவில் திறந்த வெளியரங்கில் நேற்று ஆரம்பமாகி நடைபெற்று வரும் மண்டைதீவு தமிழிசைச் சங்கத்தின்முதலாண்டு இசைவிழாவின் இரண்டாம் நாளான இன்றைய நிகழ்ச்சிகள் மாலை 6மணிக்கு பஞ்சாபிகேசன் கோஷ்டியினரின் மங்களஇசையுடன் ஆரம்பமாகும்.

லிங்கம் சகோதரர்கள், திரு.என். சண்முகரத்தினம், மற்றும் செல்விகள் என். ஸ்ரீரங்கராணி, எஸ். பவழராணி, சங்கீதபூஷணம்தங்கலட்சுமி, சங்கீதபூஷணம் போல் திலகநாயகம் ஆகியோரின் வாய்பாட்டும் என். ஆர். சின்னராசா கோஷ்டி மற்றும் கணேஷ் கோஷ்டியினரின் தவில் கச்சேரியும் விழாவில் இடம்பெறும்.

தீவுப்பகுதி எம். பி. திரு. வி. நவரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

# தமிழ் உரை நடைக்கு வித்திட்டவர் நாவலர்

**— ஔவை துரைச்சாமி**

யாழ்ப்பாணம், வெள்ளி

தமிழ் இன்று அரிய உரை நடையுடன் திகழ்கின்றதானால் அதற்கு வித்திட்டவர் நாவலர் என்பதை தமிழ் இலக்கிய உலகு என்றும் மறவாது என்று யாழ் மத்திய கல்லூரி மண்டபத்தில் உரை நிகழ்த்திய பேராசிரியர் ஔவை துரைசாமிப் பிள்ளைகூறினார்.

திரு. எம். சிறிகாந்தா தலைமையில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற இக் கூட்டத்தில் நல்லைநகர் நாவலர் என்ற தலைப்பில் பேராசிரியர் ஔவை துரைசாமி பிள்ளைமேலும்கூறியதாவது-

முதன்முதலாகத் தமிழ் மக்கள் மத்தியில் அடுக்கு மொழியை அடுக்கிக் காட்டிய பெருமை நாவலர் பெருமானுக்குரியது. எளிய நடையில் இனிய முறையில் சிறுவர்களும் விளங்கக்கூடிய விதத்தில் வினா விடைகளாக எழுதினர். ஏன்? எப்படி? என்ற கேள்விகளை சிறுவர் மத்தியில் ஏற்படுத்தும் நோக்கத்துடனேயே இப்படிச் செய்தார்.

நாவலர் காலத்துக் கல்வி முறைவேறு. தற்போதைய கல்விமுறை வேறு. ஏன் எப்படி? என்று இளைஞர்கள் ஆவல் கொண்டிருப்பது இக்காலச் சூழ்நிலை. அதிகமாக சமய நூல்களெல்லாம் வெறும் கதைகளாகவே இருந்து வந்திருக்கின்றன. பைபிள், குரான் எதை எடுத்துப் பார்த்தாலும் நாம் இதையே காணலாம். மக்கள் எதிர் வார்த்தை பேசாமல் சொல்வதை அப்படியே நம்பிக் கொண்டிருந்த காலமும் ஒன்று உண்டு. 16ம் நூற்றாண்டு முதல் 17ம் நூற்றாண்டுவரை மக்கள் இதே சூழ்நிலையில்தான் இருந்து வந்திருக்கின்றனர்.

கேள்வி கேட்கும் வழக்கம் தமிழ் மக்களுக்கு என்றும் இருந்து வந்திருக்கிறது. எப்படியோ 14ம் நூற்றாண்டின்பின் வந்த இலக்கியங்களில் ஏன்? எப்படி? என்ற கேள்விகளைக் கேட்கக்கூடிய நிலைமை இல்லாமல் போய்விட்டது. இது தமிழ்நாட்டுக்கு பெரும் வீழ்ச்சியை ஏற்படுத்தி விட்டது. இந்தமுறை 14ம் நூற்றாண்டுக்குப்பின் எப்படிப் புகுந்ததென அறியமுடியாதிருக்கிறது.

## நாவலர் சிலையை நீதியரசர் சிவசுப்பிரமணியம் திறந்து வைப்பார்

### நாவலர் கொடித்தினமும் கொண்டாடப்படும்

யாழ்ப்பாணம், வெள்ளி

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சிலையை அடுத்தமாதம் 29ம் திகதி நல்லூரில் நீதியரசர் திரு வி. சிவசுப்பிரமணியம் திறந்து வைப்பார்.

நாவலர் சபைப் பொதுச் செயலாளரான திரு. எம். ஸ்ரீகாந்தா இத்தகவலை நேற்றுத் தெரிவித்தார்.

தமிழ் நாட்டிலிருந்தும், ஈழத்திலிருந்தும் பல பெரியார்கள் இவ்விழாவில் கலந்துகொள்வதால், நாவலர் சிலையைத் திறந்துவைப்பது யார் என்பது இதுவரை முடிவு செய்யப்படாமலிருந்தது.

நாவலர் விழாவை முன்னிட்டு ஜூன் மாதம் முதல் வாரத்தில் ஒரு நாளை நாவலர் கொடித்தினமாகக் கொண்டாடுவதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் 29-ம், 30-ம்திகதியும் ஜூலைமாதம் 1-ம் திகதியும் நடைபெறவிருக்கும் மூன்றுநாள்விழாவில் சிறு மாற்றங்கள்செய்யப்பட்டுள்ளன. 29-ம் திகதியான முதல்நாள் விழா மட்டுமே நல்லூரில் நடைபெறும். இறுதி இரண்டு நாள் விழாவும் யாழ். திறந்த வெளியரங்கில் நடைபெறும்.

யாழ்ப்பாணத்தில் திரு. எம். ஸ்ரீகாந்தாவின் இல்லத்தில் நேற்று மாலை கூடிய விழாக்குழு இவ்வாறு முடிவு செய்தது. (கா. நி)

## சேக்கிழார்விழா

### இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

சேக்கிழார் விழாவின் இரண்டாம் நாளான இன்றைய நிகழ்ச்சிகள் மாலை 3 மணிக்கு திருமதி ஞானேஸ்வரி சோமசுந்தரம் தலைமையில் யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் ஆரம்பமாகும்.

நிகழ்ச்சிகள் விபரம்:-

மாலை 3 மணி: யாழ். இந்து மகளிர் கல்லூரி, கனகரத்தினம் மகாவித்தியாலயம், மானிப்பாய்இந்துக்கல்லூரி, யூனியன் கல்லூரி, புங்குடுதீவுமகாவித்தியாலயம், மத்தியகல்லூரி. யாழ். இந்துக் கல்லூரி, பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி ஆகியவற்றின் மாணவர்கள் கலந்துகொள்ளும்கருத்துமேடை.

4-30 மணி: திரு. மு. வைரமுத்து தலைமையில் விழா நடைபெறும்.

4-40 மணி: மானிப்பாய் இந்துக்கல்லூரியின் திருமுறை ஓதல்.

4-45 மணி: பண்டிதை சைவப்புலவர் தங்கம்மா அப்பாக்குட்டி ''சேக்கிழார் காட்டிய காவியத்தலைவன்'' பற்றிச் சொற்பொழிவு.

5-30 மணி: கனகரத்தினம் மகாவித்தியாலய மாணவர் திருமுறை ஓதல்.

5-45 மணி: பரிசளிப்பு.

6-30 மணி: திரு்முறை ஓதல்

6-45 மணி: ஔவை சு. துரைசாமிப்பிள்ளை ''சிவநெறித் திருத்தொண்டர்'' பற்றிச்சொற்பொழிவு நிகழ்த்துவார்.

8-10மணி: சங்கீதபூஷணம் நாகம்மா கதிர்காமரின் திருமுறைப் பண்ணிசை.

(கா. நி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல் வேளாண்மைத் தொழிலை இலாபகரமாக்குவது எப்படி?

## நெல்விதை, மண் ஆராய்ச்சி நிலையங்கள் வேண்டும்; தண்ணீர் தட்டுப்பாட்டை போக்க ஸ்தாபனம் தேவை

க. சி. ஆறுமுகம்
இளைப்பாறிய கிருஷிகப்பிரசாரகர்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தற்போது செய்யப்படும் நெல்வேளாண்மை அதிகம்நட்டத்தைக் கொடுக்கிறது. இதை ஒரு லாபகரமான தொழிலாக்கி வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவாயினும் குறைக்க வேண்டும்.

சுமார் இருபது வருடகாலமாக வடகீழ்ப்பருவக் காற்று மாறுங்காலத்தில் சித்திரைக்குழப்பம் என்னும் மழை சித்திரை மாதக்கடைசியிலும், வைகாசி மாத முதற் பகுதியிலும் பெய்வதில்லை. இருபது வருடங்களுக்கு முன் இம்மழை ஒழுங்காகப் பெய்துவந்தது. மாரி மழையும் புரட்டாசி மாதம் தொடக்கம் மாசி மாதம்வரை பரவலாகப் பகிர்ந்து பெய்துவந்தது. இவ்வாறு மழை பரவலாகப் பகிர்ந்துபெய்துவந்தமுற்காலத்தில்நெற்செய்கைஓரளவு லாபகரமாயிருந்தது. அதுவுமல்லாமல் தை, மாசி மாதங்களில் பெய்துவந்த நெல் அறுவடை அல்லது உப்பட்டி மழை சிறு தானியங்கள் விதைக்க வழக்கமாக உதவியாக இருந்தது. சித்திரை மாத மழை சிறு தானியங்கள் நல்லாகச் செழிக்கவும், மரம், செடி, கொடி, புல்பூண்டு முதலியன நல்லாக வளரவும் குடிதண்ணீர் குறையாமல் இருக்கவும் உதவியது.

இம்மழை ஒழுங்காகப் பெய்துவந்த முற்காலத்தில் சிறுதானியப் பிரயோசனங்களும் வயல்களில் இறைப்பு மூலம் உண்டாக்கப்பட்ட காய்கறிவகைகளும் விவசாயிகளுக்கும் கால்நடைகளுக்கும் ஆறுமாத காலங்களுக்குப் போதுமான உணவாயிருந்தன. மற்ற ஆறு மாதங்களுக்கும் நெல்லும் வைக்கோலும் காணக்கூடியதாக இருந்தன. கால்நடைகளுக்கு நல்ல போதுமான உணவும், மரம், செடி, கொடி வகைகளுக்கு நல்ல மழை ஈரமும் இருந்த காலத்தில் நிலத்துக்கு இடவேண்டிய பசளை வகைகளுக்குக் குறை [illegible]

பொறுக்கு விதை இனங்களை உற்பத்திசெய்து கொடுக்க ஓர் உபநெல்விதைஆராய்ச்சி நிலையமும் பயிர்வகைசெய்யும் ஒவ்வொருவிவசாயியின் மண்ணையும் மூன்று, நாலு ஆண்டுகளுக்கு ஒரு முறை பரிசோதனைசெய்து அவைகளுக்கு இடவேண்டியபசளைவகைகளைச் சிபார்சுசெய்ய மண்பரிசோதனைசெய்யும் ஒரு ஸ்தாபனமும்வேண்டும்.

### குழாய்க்கிணறுகளும் இயந்திரவசதிகளும்

இதுவுமல்லாமல் மழைக்குறைவால்உண்டாகும் தண்ணீர்க்குறைவை நிவர்த்திசெய்ய பொதுவான கிணறுகளும் நிலத்துக்குக்கீழ் ஆழமாகவுள்ள நீர்ஊற்றுக்களைக் கண்டுபிடிக்கும் இயந்திர உதவியினல் ஊற்றுக்களைக் கண்டுபிடித்து குழாய்நீர்க் கிணறுகளைத் தோண்டிக் கொடுக்கவும் அதற்குத் தேவையான யந்திரங்களையும் உபகரணங்களையும் கொண்டஸ்தாபனம்ஒன்றும்




ஸ்தாபிக்கப்படவேண்டும். இம்மூன்று ஸ்தாபனங்களும் யாழ்ப்பாணத்தில் எப்பகுதியிலாவது ஸ்தாபிக்க உடனடியாக வேலைகளைத் தொடங்க வேண்டும். இவைகளைச் செய்வித்துத்தர பயிர்ச்செய்கைக் குழுக்கள் நெருக்கிக் கேட்கவேண்டும். இக் குழுக்களின் பிரதிநிதிகள் யாழ்ப்பாண அரசாங்க அதிபரையும் விவசாய மந்திரியையும் பிரதமரையும் பேட்டி கண்டு ஆவன உடனே செய்விக்க முயற்சி எடுக்க வேண்டும்.

### இரசாயன உரத்தால் மட்டும் பயனில்லை

நல்ல விறகாக உதவுகின்றன. முற்றிய பூவரச மரங்கள் நல்ல விலைக்கு விற்கக்கூடிய மரங்களாகின்றன. நெல் அறுவடைக்குப்பின் சணலை விதைத்துச் சருகுகளை உதிரவிட்டு விதைகளையும் கம்புகளையும் வேருக எடுக்கலாம். சருகு நல்ல பசளையாகின்றது. ஈரமில்லாத பெருமணலுள்ள இடங்களில் தண்ணீரை நீர் தெளிக்கும் கருவியால் தெளிக்கலாம். மற்றவித மண்களில் நீரை இறைக்கலாம்.

இக்குடாநாட்டின் நிலைமைக்கேற்ற நல்ல பொறுக்கு விதை இனங்களை உற்பத்தி செய்தல், பொதுவான கிணறுகள், ஆழமான நீர் ஊற்றுக் கிணறுகளின்மூலம் இறைத்துப் பெறக்கூடிய நீர் வசதிகளை உண்டாக்குதல், கால் நடைகளுக்குப் போதுமான உணவை உண்டாக்குதல், அவற்றின்மூலம் ஏராளமான எருவைப் பெறுதல், பச்சை இலை குழைகளை அதாவது பூவரசு, சீமைக் கிழுவை, சணல், காவுளாய் முதலியவற்றை உண்டாக்குதல், ஆதியனவே நெல் விளைவை அதிகரிக்கச் செய்யும். இதற்குத் தேவையான பணத்தை உதவவும், முன் மாதிரிச் செய்கைகளைச் செய்து காட்டவும் பரிசுப் போட்டிகளை உண்டாக்குவதுடன் வானொலி மூலம் பிரசாரஞ்செய்யவும், விவசாய இலாகாவும் பயிர்ச் செய்கைக் குழுக்களும் முன் [illegible]

பதில் பலன் இல்லை. விளைவும் அதிகரிக்கப் போவதில்லை. கிருமி நாசினிகளையும் களைப்புல்லுக் கொல்லிகளையும், அவைகளை உபயோகிக்கும் கருவிகளையும் பயிர்ச்செய்கைக் குழுக்கள் வாங்கி வைத்துத் தேவையான நேரங்களில் கமக்காரர்களுக்கு விற்கவும் வாடகைக்குக் கொடுக்கவும் ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும். பூச்சி புழுக்களால் உண்டாகும் நட்டம் 10 15 சதவீதத்துக்குக் குறையாமல் உண்டு. களைப்புற்கொல்லி பாவியாவிட்டால் அல்லது களைப் புல்லுகளைப் பிடுங்காவிட்டால் ஐம்பது சத வீதத்திற்குக் குறையாமல் நட்டம் உண்டாகும்.

### ஏன் அக்கறை காட்டவேண்டும்?

இன்னும் ஒரு விடயத்தையும் நாம் கவனிக்க வேண்டும். யாழ்ப்பாணக்குடாநாட்டின் நெற்செய்கையை லாபகரமாக்குவதற்கு அரசாங்கம் இன்றுவரை ஒரு சதமேனும் செலவிடவில்லை இலங்கையின் மறு பாகங்களிற் செய்விக்கப்படும்வேளாண்மைக்காக ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான ரூபா செலவிடப்படுகின்றது. இதுவரை நட்டத்திற் செய்யப்படும்நெற் செய்கையை லாபகரமாக்கித் தரும்படி அரசாங்கத்தை அணுகி நாங்கள் கேட்கவுமில்லை. இதற்குக் காரணமென்ன? சென்ற சுமார் முப்பது வருடங்களுக்குமுன் எங்களுக் குப் பணக்குறைவு இருக்கவில்லை. மலேஷியாவிலிருந்தும் இலங்கையின் மறு பாகங்களிலுமிருந்தும் பணம் வந்து கொண்டிருந்தது. மலேஷியாவில் எங்களுடைய மக்கள் சம்பாதித்துவந்த பணவசதிகளெல்லாம் சென்ற சுமார் முப்பது வருடங்களாகக் குன்றிவிட்டன. மலேஷி[illegible] க்கள் [illegible] மக்கள் இனிமேல் போக முடியாது. அங்கிருந்துவரும் [illegible]

நட்டப்படவிடாமல் இலாபகரமான தொழிலா[illegible]கித் [illegible] அரசாங்க[illegible]தை மிகப்பணிவுடன் நெருக்கிக் கேட்கவேண்டும்.

# மகாபலி பணிந்தான்

### கம்பர் கவி விருந்து

இராமாயண இரசிகமணி
ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்
(நல்லை ஆதீன கர்த்தர்)

முடியஇம்மொழிஎலாம்
மொழிந்தது, மந்திரி
கொடியன் என்(று)
உரைத்த சொல் ஒன்றும்
கொண்டிலன்
''அடி ஒரு மூன்றும் நீ
அளந்து கொள்'' கென
நெடியவன் குறியகை
நீரில் நீட்டினன்.

புரோகிதராயிருப்பதோடு சுக்கிராச்சாரியார் முதல்மந்திரியாகவும் இருப்பவர். எனவே, மந்திரி ''கொடியன்'' என்று சொல்லிவிட்டானும் மகாபலி. ''நல்லகுரு நல்ல மந்திரி! இதுவோ உம்முடைய ஆலோசனைத் திறம்?'' என்பது குறிப்பு.

பிறகு குருவை முகம் நோக்கிப் பாராமலே குள்ளனை நோக்கி, ''அடி ஒரு மூன்றும் நீ அளந்துகொள்'' என்று தானம் கொடுத்து விடுகிறான்.

தானத்தைஉறுதிப்படுத்துவதற்காகத் தண்ணீரைத் தாரை வார்த்துக் கொடுப்பது வழக்கம். அப்படி மகாபலி தாரை வார்த்துக் கொடுப்பதும், அந்த நீரில் குள்ளன் தன் குறுகிய கையை நீட்டுவதும் எவ்வளவு வேகமாக நடைபெறுகின்றன.

யாசகத்திற்குவரும்போது குறுகிக்குறுகிக் குள்ளனுகி வந்தவன், காரிய சித்தி பெற்ற குதூகலத்திலே, அந்தக் குறுகிய கையை நீட்டிய வண்ணமே, நிமிர்ந்து விடுகிறானும். வாமனன் திரிவிக்ரமனுக நீளப்போகிறான் விரைவிலே! என்ற அந்த அதிசயத்தைத்தான் எவ்வளவு வேகமாகக் கவிஞன்,

நெடியவன் குறியகை
நீரில் நீட்டினன்

என்று குறிப்பிடுகிறான்.

மகாபலி தாரைவார்த்துக் கொடுத்த தீர்த்தமானது, அப்போதுதான் தாமரைக் குளத்திலிருந்து எ[illegible]து வந்த குளிர்ந்த தீர்த்தம், அந்த நன்னீர், தானம் கிடைத்து விட்டதற்கு அறிகுறியாக அந்தக் குறுகிய கையை நீண்டியதும், நிகழத் தொடங்கிய அந்த அதிசயத்தை தான் எவ்வளவு தெளிவாக-அருகேயிருந்து பார்க்கும் ஒருவன் பக்கத்திலிருக்கும் மற்றவர்களுக்கும் காட்டிவியாக்கியானம் செய்வது போல்- சுட்டிக்காட்டுகிறான் கவிஞன்.

கயந்தரு நறும்புனல்
கையில் தீண்டலும்
பயந்தவர்களும் இதழ்
குறளன், பார்த்(து) எதிர்
வியந்தவர் வெருக்கொள
விசும்பின் ஓங்கினன்
உயர்ந்தவர்க்(கு) உதவிய
உதவி ஒப்பவே

பயந்த பிரகிருதிகள் கூட இந்தக் குள்ளனைப் பார்த்தால் பயமில்லாமல் இகழத் தொடங்கி விடுவார்களாம். அத்தகைய பயத்தையும் இகழ்ச்சியையும் பளிச்சென்று விட்டுவிட்டு, எதிரேயிருந்து பார்க்கத்தொடங்கிவிட்டார்களாம் ஆச்சரியத்தோடு, அந்தக் குள்ளன் நிமிர்ந்து பொங்கித் தங்கள் கண்முன்னே வளரத் தொடங்கிய அந்த அதிசயத்தை. அலட்சியமும் இகழ்ச்சியும் போய் அடுத்த க்ஷணமே அந்த அதிசய உணர்ச்சியும் மறைந்து போய், பயமே வந்துவிடுகிறதாம். எந்த இயக்கமும் தன் வளர்ச்சியிலே அலட்சியம், இகழ்ச்சி, எதிர்ப்பு, மரியாதை அல்லது பயபக்தி என்ற நாலு நிலைகளையும் கடந்துபோகிறது என்று சொல்லுகிருர்கள் அல்லவா? இந்த வாமனனும் தன்னுடைய திரிவிக்கிரமவளர்ச்சியிலே பலிச்சக்கரவர்த்தியில் அதிகாரிகளுடைய அலட்சியம், இகழ்ச்சி, மந்திரியின் எதிர்ப்பு, பிறகு அதிசயஉணர்ச்சி, கடைசியாகப் பயபக்தி என்ற நிலைகளையெல்லாம் கடந்துபோகின்றுன் என்பது கவிஞன் குறிப்பு.

இந்த வளர்ச்சிக்குக் கவிஞன் கொடுக்கும் உபமானத்தைத்தான் பாருங்கள்.

''உயர்ந்தவர்க்(கு) உதவிய
உதவி ஒப்பவே''

தாழ்ந்தசுபாவமும் பழக்கங்களும் உள்ளவர்களுக்கு ஒருவன் எவ்வளவு கொடுத்தாலும் அந்த உதவி ஓங்கித் தோன்றுமா?

''என்ன கொடுத்துவிட்டான், பிரமாதமாக! ஆயிரம் ரூபாய்தானே!'' என்று லேசாக அடித்துப்பேசிவிடுவார்கள். உயர்ந்த சுபாவமும்பண்பாடும்உள்ளவனே, ''அஞ்சு ரூபாயா கொடுத்தான்? அந்த அஞ்சே ஐயாயிரமல்லவா? அந்தப்பொன்னன உள்ளம் போதுமே!'' என்று உணர்ச்சியோடு பாராட்டுவான்.

இந்தக் கருத்தை நாம் திருக்குறளிலும் பார்க்கின்றோம்.

உதவிவரைத்(து)
அன்று உதவி,-உதவி
செயப்பட்டார்
சால்பின் வரைத்து.

உதவியானது உதவியைப் பெறுகிறவர்களின் குணத்திற்குத் தகுந்தபடி உயர்ந்து போகிறது-என்ற பொருளிலே கம்பன் இந்தக்குறளை அனுபவித்திருக்கவேண்டும். இப்படி அனுபவித்ததால் தான் ''உயர்ந்தவர்க்கு உதவிய உதவி ஒப்பவே'' என்று வியாக்கியானம் செய்திருக்க வேண்டும். குறளுக்கும் ஒரு குறுகிய, எளிய, அதிசய வியாக்கியானம் என்று சொல்லும்படி மகாவிஷ்ணுவைக் காட்டிலும் உயர்ந்தவர்களுண்டா? அவருக்கு உதவியஉதவியல்லவா? அப்படி உயர்ந்து போன குள்ளமூர்த்தியின் ஒரு பாதம் பூமியை மிதித்தபடியே இருக்கிறது. ஆனல் அந்தக் குறுகிய அடி விரிந்து விரிந்து பூலோகம் முழுவதிலும் நிரம்பிவிடுகிறதாம், பூமி சிறிது என்ற காரணத்தினல் தான் அப்பாலும்பரவவில்லையாம். மற்றொருதிருவடியோ ஆகாயம் முழுவதையும் ஒருசேரத் தன்னுள் ஒடுக்கிக் கொண்டு மேலேபேரண்டத்திலும் வேறு இடமில்லை என்று தெரிந்து திரும்பிவிடுகிறதாம்.

இப்படி ஓரடியால் மண்ணுலகையும், மற்றொரு அடியால் விண்ணுலகையும் அளந்த அதிசயத்தைச் சொல்லிவிட்டு மூன்ருவது அடிக்கு இடமில்லாததால், மகாபலி ''இனி அடியேனது முடியே உள்ளது'' என்று வீண் பெருமையை விட்டுப் பணிந்துவிட்டான் என்கிறுன் கவிஞன். ''வாமனன் மண் இது!'' என்று ஆழ்வார் சொல்கிறுரல்லவா? ''உலகம் எந்தச் சக்கரவர்த்திக்கும் பொது'' என்ற பாடத்தைக் கற்றுக்கொண்டிருக்க வேண்டும், மகாபலியும் குள்ளனுக வந்த பகவான் மூலமாக.

மண்ணையும், விண்ணையும் ஈரடியால் அளந்த நெடுமாலின் அந்தத் திருவடிகளைத் தான் எவ்வளவு வசீகரமாக, ஹாஸ்யரஸம் சிறிது கலந்த

(5-ம் பக்கம் பார்க்க)

சேவையே வாழ்வின் நோக்கமாகிவிட்டால் ......

# கிருகஸ்தனுக்கும் பிரம்மசாரிக்கும் உலகம் இன்பவீடாகிவிடும்

—2—

பட்ட இந்த ஒரு கொடைக் காக இதயம் உள்ளவரை [illegible]

ளிக்கும் இறைவன் எந்த ஓர் உயிரையும் அனுதை [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதங்களுக்கும் நெல்லும் வைக்கோலும் காணக்கூடியதாக இருந்தன. கால்நடைகளுக்கு நல்ல, போதுமான உணவும், மரம், செடி, கொடி வகைகளுக்கு நல்ல மழை ஈரமும் இருந்த காலத்தில் நிலத்துக்கு இடவேண்டிய பசளை வகைகளுக்குக் குறைவில்லை. நெல்விளைச்சலும் அதிகமாக இருந்தது. தற்போது அதாவது சென்ற சுமார் இருபது வருட காலமாக சித்திரை மழை பெய்யாத காரணத்தாலும், தை, மாசி மாத உப்பட்டிமழை பெய்யாததாலும் நெல் அறுவடைக்குப்பின் சிறுதானியங்கள் வருடாவருடம் விதைக்கமுடியாமல் இருக்கிறது. ஆகையால் கால்நடைகளுக்கும் கமக்காரருக்கும் உணவுத் தட்டுப்பாடு உண்டாயிற்று. இதன் காரணமாகக் கால்நடைகள் இறைச்சிக்கடைக்காரருக்கு விற்கப்படுகின்றன. உழவு மாடுகளுங்கூட வைத்திருக்கப்படுவதில்லை. இயந்திரக் கலப்பைகள் உழவு மாடுகளுக்குப் பதிலாகப் பயன்படுத்தப்படுகின்றன. கால்நடை வளர்ப்பு இல்லாததனுல் வயல்களுக்குத் தேவையான எருவகைகள் கிடைப்பதில்லை. கோடை மழைக் குறைவால் பச்சை இலைகளும் கிடைப்பது குறைவு. பனை ஓலையும் பரவலாகக் குறைந்துவிட்டது.

### இலாபகரமாக்குவது எப்படி?

மழைக்குறைவும் பசளைக் குறைவும் காரணமாக நெல் விளைவு அதிகமாகக்குறைந்துவிட்டது. முற்காலத்தில் 2—4 புசல் வீதம்கிடைத்த வயல்களில் தற்போது பரப்பும் பறையும்தான் கிடைக்கிறது. மணற்பாங்கான வயல்களில் அரைப்பறையும் முக்காற்பறையும் தான் பெறப்படுகிறது. பச்சிலைப் பள்ளியில் சராசரி வீதம் ஏக்கருக்கு 13 புசல்தான்கிடைக்கிறது. இவ்விளைச்சற் குறைவோடு உழவுச்செலவும், தொழிலாளர் சம்பளமும் உயர்ந்துகொண்டிருப்பதால் நெற்செய்கை இங்கே நட்டத்தில் முடிகிறது. இங்ஙனம் நட்டத்திற் செய்யப்படும் நெல் வேளாண்மைத் தொழிலை இலாபகரமாக்குவது எப்படி? நெல் விளைவைக் கூட்டுதலும், பசளை வகைகளைப்போதுமான அளவுக்கு உற்பத்திசெய்தலும், இறைப்புநீர் வசதியை உண்டாக்குவதும் அத்தியாவசியம். விளைவைக்கூட்டுவதற்கு இக் குடாநாட்டின் சீதோஷ்ண நிலைமைகளிலும் நீர் நிலவளங்களிலும் நல்லாக வளர்ந்து அதிக விளைவைக்கொடுக்கக்கூடிய

திரியையும் பிரதமரையும் பேட்டி கண்டு ஆவன உடனே செய்விக்க முயற்சி எடுக்க வேண்டும்.

### இரசாயன உரத்தால் மட்டும் பயனில்லை

தேவையான பசளை வகைகளைப் பெறுவதற்குப் பூவரசையும் சிமைக்கிழுவைகளையும் மேட்டு நிலங்களின் எல்லைகளில் தாராளமாக நடவேண்டும். இவை இரண்டும் நல்ல இலைப்பசளையைக் கொடுப்பதுமல்லாமல் கால்நடைகளுக்கும் நல்ல உணவும் ஆகிறது. தடிகளும் பணத்தை உதவவும், முன்மாதிரிச் செய்கைகளைச் செய்து காட்டவும் பரிசுப் போட்டிகளை உண்டாக்குவதுடன் வானெலி மூலம் பிரசாரஞ்செய்யவும், விவசாய இலாகாவும் பயிர்ச்செய்கைக் குழுக்களும் முன்வரவேண்டும். இந்நான்கு விடயங்களையும் அதாவது நல்ல விதைநெல், போதிய நீர்வசதி, கால்நடைகளுக்குப் போதுமான உணவு, இலை, குழை வகைகள் முதலியவற்றைப்பெற வசதி செய்யாமல் வெறும் இரசாயன உரத்தை மாத்திரம் குறைந்த விலையில் கொடுப்

யாவில் எங்களுடைய மக்கள் சம்பாதித்துவந்த பணவருதிகளெல்லாம் சென்ற சுமார் முப்பது வருடங்களாகக் குன்றிவிட்டன. மலேசியாவுக்கு வேலை வாய்ப்புக்கள் தேடி எங்களுடைய மக்கள் இனிமேல் போக முடியாது. அங்கிருந்துவரும் பென்ஷனும் வருடாவருடம் வற்றி வருகிறது இலங்கை அரசாங்கத்திலே இதற்குமுன் பார்த்து வந்த வேலைகளும் குறைந்து விட்டன. ஆகையால்தான் நாங்கள் பாடுபட்டுச் செய்விக்கும் நெல் வேளாண்மைத் தொழிலை இனிமேலாயினும்

வந்த குளிர்ந்த நீரும், அந்த நன்னீர், தானம்

நட்டப்படவிடாமல் இலாபகரமான தொழிலாக்கித் தரும்படி அரசாங்கத்தை மிகப்பணிவுடன் நெருக்கிக் கேட்கவேண்டும்.

### கட்சிப்பாகுபாடற்ற ஒத்துழைப்புத்தேவை

விவசாயிகளும் அரசாங்கமும் ஒன்று சேர்ந்து கட்சிப்பாகுபாடில்லாமல் ஒத்துழைத்தால் வேளாண்மையில் நிச்சயம் லாபமும் வெற்றியும் கிட்டும்.

# நாவலருக்குப் பெண்கொடுக்கப் பலர் போட்டியுடன் முன்வந்தனர்

## இல்லறத்தில் ஈடுபடுத்த அவர் சகோதரர் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியுற்றன

அறநெறிக் காவலர்
முதலியார் செ. முத்துத்தம்பி

### ஐந்தாங்குரவர் ஆறுமுகநாவலர்

"யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே" என்பதுபோல் யாழ்ப்பாணத்து விவிலிய வேதமென்னும் பைபிள் மொழிபெயர்ப்பு சென்னை மொழிபெயர்ப்பை வென்றுவிட்டதாமென்ற கீர்த்திப் பிரதாபம் கலாநிதி பீற்றர் பார்சிவல் துரைமகனுரும் எங்கள் பெருமான் ஆறுமுகநாவலரும் யாழ்ப்பாணம் வந்து சேருமுன் எங்கும் பரவிற்று. கலாநிதியார், பெருமான் மீது முன்னிலும் பன்மடங்கு அன்பும் மதிப்பும் காட்டி நடக்கத் தொடங்கினுர். சென்னையில் பல சபைகளில் பெருமானைச் சந்திக்க நேர்ந்தபொழுது எழுந்து நின்று "குருப்பியோ நம" என்று சொல்லி இருகை கூப்பி வணங்கி அவர் அமர்ந்த பின்னரே தாம் அமருவார். நெற்றியில் விபூதி அணிபவர்களின் விபூதியை அழிப்பித்து அவர்களைக் கிறிஸ்தவர்களாக்கக் கங்கணம் கட்டிக்கொண்டிருந்த பார்சிவல் பாதிரியார் சிவக்கோலத்துடன் தோன்றும் நாவலர்பெருமானை எழுந்து நின்று இருகைகூப்பி வணங்கினுரெனின் சைவர்கள் அவரை எவ்விதமாக வணங்கித் துதிப்பது.

கிறிஸ்து மதத்தை நாவலர் பெருமான் அறிந்திருந்ததைப்போல இன்னுமொருவர் அவர் காலத்திலும் சரி அவருக்குப் பின்னும் சரி இருக்கவில்லை. சுத்தாத்துவித சைவசித்தாந்தத்தை அவர் அறிந்திருந்தது போல யாருமறிந்திருக்கவில்லை. தமிழறிவு அவருக்கிருந்தது போல யாருக்குமிருந்ததில்லை. மக்கள் அவரைத் தெய்வம்போல் வணங்கத் தலைப்பட்டார்கள். வயது முதிர்ந்த சைவமக்கள் அவர் பாதத்தில் விழுந்து நமஸ்கரிக்கலாயினர். சைவமக்கள் கூட்டம் கூட்டமாக வந்து சைவசமயத்தைப்பற்றியும் தமிழைப்பற்றியும் தங்களுக்குத் தெரியாதவற்றைக் கேட்டுத் தெளிவார்கள். அவர்களுக்கு பதியிலக்கணம், பசுவிலக்கணம், பாசவிலக்கணத்தைப்பற்றிப் போதிப்பார். மறுபிறப்பு, இம்மை, மறுமை, வீடு பற்றியும், புண்ணிய பாவத்தைப்பற்றியும் சொல்லுவார். ஆலயதரிசனம் செய்யவேண்டிய முறைகளைப்பற்றியெடுத்துரைப்பார். அவர்கள், இவைகளைப் பெருமானுர் எங்கு கற்ருர், யாரிடம் கேட்டறிந்தார் என வியந்து, இவர் தங்களை காக்கும்பொருட்டுப் பரமபதியாகிய சிவபெருமானுல் அனுப்பப்பட்ட மகானுபாவரெனவெண்ணிக் கண்மழைபொழிந்தனர்.

ஒரு சைவாசிரியனுகப் பெருமான் விளங்கினுர். வேதனம் சிறிதும் பெருது காலையிலும், இரவிலும் பாடம் சொல்லிக்கொடுக்கத் தொடங்கினுர். இவைகளை இவருடைய நான்கு அண்ணன்மாரும் கண்டு திடுக்குற்றனர். தமது தம்பியாரின் போக்கு நல்லாயில்லையென்றும் துறவியாக அவர் மாறிவிடக்கூடுமென்றும் அஞ்சினுர்கள். எனவே அவரை இல்வாழ்க்கையில் ஈடுபடச்செய்வது தமது கடமையென்று கருதி அதற்கான முயற்சியிலீடுபடத் தொடங்கினர்.

நாவலர்பெருமான்பாண்டிமழவன் குடியில் பிறந்தவர். கார்காத்த வேளாண்வருணம் பரம்பரையாக அவரது முன்னுேர்கள் அரசாங்கத்தில் உயர் பதவி பெற்றிருந்தவர்கள். நாவலர் பெருமானும் மொழிப்புலமைபெற்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் தமிழ்ப்பண்டிதராகப் பெருமதிப்புடன் கடமையாற்றிவந்தார்.. அரசாங்கத்தில் அவர் கேட்ட மாத்திரத்தில் அவருக்கு உத்தியோகம் தவருது கிடைக்கும். வீடு, வளவு, தோட்டம், துரவு, காணி, பூமி, பணம், பொன் முதலியவற்றுடன் அவருக்குப் பெண்கொடுக்க நான் முந்தி நீ முந்தியெனப் பலர் முன் வந்தார்கள். தம்பியை நேரில் கண்டு தமையன்மார், 'இனி இல்லறம் நடத்தவேண்டிய காலம் வந்துவிட்டது. ஆனதினுல் தடை சொல்லாமல் திருமணத்திற்குச் சம்மதிக்க வேண்டும்' என நெருக்குதல் செய்தார்கள். பெருமானுே தமது கல்யாணப் பேச்சைத் தமது காதில் கேட்கப் பேசவேண்டாமென்று ஒரே சொல்லில் முடித்துவிட்டார். சகோதரர்கள் செய்வதென்னவென்று அறியாது திகைத்தார்கள். அந்தக் குடும்பத்தின் குலகுருவான வேதக்குட்டிக் குருக்கள் சொன்னுல் தம்பியார் மணமுடிக்கச் சம்மதிக்கக் கூடுமென்றெண்ணி அவரை நாவலர் பெருமானிடம் அனுப்பிக் கேட்பித்தார்கள். பெருமான் தம்மிடம் கலியாணக் கதையை மாத்திரம் பேசவேண்டாமென்று அவரிடம் பணிவுடன் கேட்டுக் கொண்டார். பெருமான் பிரம்மச்சாரியாகவிருந்து சைவத்திற்கும் தமிழுக்கும் தமிழ் நாட்டவருக்கும் தொண்டு செய்யத் துணிந்து விட்டார். குறைந்தது முப்பத்தைந்து ஆண்டுகள் அவர் எங்களுக்காக அயராது உழைத்தார்.

நாவலர் பெருமான் அவதரித்தது 1822ம்ஆண்டு. அவர் நடராசப் பெருமானின் குஞ்சித பாதத்தையடைந்தது 1879ம் ஆண்டு அவர் இந் நிலவுலகத்தில் 57 ஆண்டுவரை வாழ்ந்தார். இன்று அவர் இறைவனடி சேர்ந்து 90 ஆண்டுகளாகிவிட்டது.

(தொடரும்)

# கிருகஸ்தனுக்கும் பிரமசாரிக்கும் உலகம் இன்பவீடாகிவிடும்

### வாழ்க்கையில் நிம்மதி

திருமதி பார்வதி நாகலிங்கம்

—2—

ஒவ்வொரு பருவத்திலும் வாழ்க்கையை இன்பமயமானதாக்கி வைத்திருக்கிறுன் இறைவன். குழந்தை பிறந்ததிலிருந்து கிழவனுகி இறக்கும்வரை அவனைச் சுற்றிலும் இன்பத்தை நிறைத்து வைத்திருக்கிருன் அவன். குழந்தையாக இருக்கும் போது அவற்றை அனுபவிக்கும் மனிதன் வளர்ந்ததும் அவற்றைக் காணமுடியாமல் போவது ஏன்? வளர்ந்ததும் மனிதனிடம் குழந்தை மனம் இல்லாமல் போவதுதான் அதற்குக் காரணமாக இருக்கவேண்டும். ஆம், இறக்கும்வரை மனிதனுக்கு குழந்தைமனம் இருந்தால் இறைவன் மனிதக் குழந்தைக்காகப் படைத்திருக்கும் இன்பங்கள் அத்தனையையும் அனுபவிக்கலாம். குழந்தையாகவே கவலையற்று வாழ்ந்து கவலையற்று இறக்கலாம்.

குழந்தையாக உருப்பெறும்போது தாயின் வயிற்றில் எவ்வளவோ பாதுகாப்பாக வளர்ந்து பிறந்தது முதல் பிள்ளைப்பருவம்வரை தாயின் அன்பிலும் அரவணைப்பிலும் வளர்கிறுேம். இதற்கு ஈடான சொர்க்கம் வேறு உண்டா?

பிள்ளைப்பருவம் முதல் பள்ளிப்பருவம்வரை வாழ்க்கை ஒரு விளையாட்டாக மாறிவிடுகிறது. பள்ளிக்கூட வாழ்க்கையும் நண்பர்களுடன் கொம்மாளமும் சொல்லி முடியாதே. அப்போது வாழ்க்கை எவ்வளவு இனிக்கிறது.

வாலிபப் பருவம் தொடங்கியதும் கல்வி இன்பம், கலை இன்பம் முதலியவற்றுடன் காதல் இன்பமும் சேர்ந்துவிடுகிறது. அழகை உணரவும் ரசிக்கவும் கற்றுக் கொடுக்கிறது காதல் உணர்ச்சி. இறைவனுல் அளிக்கப்பட்ட இந்த ஒரு கொடைக்காக இதயம் உள்ளவரையும் நன்றி பாராட்ட நாம் கடமைப்பட்டிருக்கிறுேம்.

குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டதும் இதுவரை இருந்துவந்த சிறுபிள்ளைத்தனம் மறைந்து பெரிய மனுஷத்தனமும் பெருந்தன்மையும் பெருமித உணர்ச்சியும் கூடவே வந்துவிடுகின்றன. புதுமனைவியுடன் வாழ்க்கை நடாத்தி முதல் குழந்தை பிறந்து குழந்தைகளை வளர்த்து அவர்கள் பெரியவர்களாகும்வரை ஒவ்வொரு காலகட்டத்திலும் ஏற்படும் இன்ப அனுபவங்கள் எத்தனை எத்தனை! குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டுத் தம் குழந்தைகளுக்காகவே வாழும் தியாக வாழ்க்கையில் எத்தனை இன்பம் ஏற்படுகிறது.

முதுமைப் பருவம் அடைந்துவிட்டால்மட்டும் இன்பங்கள் குறைந்துவிடுகின்றனவா? குடும்பப் பொறுப்பு குறைந்துவிடுகிறது. பிள்ளைகளை வழிநடத்துவதிலும், பேரக் குழந்தைகளைக் கொஞ்சுவதிலும் கிடைக்கும் இன்பம் சாதாரணமா? இந்தப் பருவத்தில்தான் இறைவனின் ஞாபகம் அதிகமாக ஏற்படுகிறது. இத்தனை நாட்களாக இறைவன் படைத்துத்தந்த இன்பங்களை உணரமுடியாது போய்விட்டதை எண்ணி அவற்றை இப்போதாவது உணர்ந்துகொண்டோமே என்ற எண்ணத்தினுல் ஏற்படும் இன்பப் பெருமிதம் ஈடு இணையற்றது. கோவில் குளம் முதலியன அளிக்கும் இன்பம் எல்லையற்றது. இறக்கும்வரை இன்பமே.

எல்லோருக்கும் குழந்தையும், குடும்பமும் கிடைத்துவிடுகிறதா? அதற்குக் கொடுத்து வைக்காதவர்கள் நிலை என்ன என்று கேட்கலாம். அவர்களைப்போல பாக்கியசாலிகள் யார்? தனிமைதரும் இன்பத்துக்கு நிகரானது எது? குடும்பப் பொறுப்புகள் இல்லாதவர்கள் தெய்வசிந்தனையிலும் சேவை செய்யும் தியாக வாழ்க்கையிலும் ஈடுபட வாய்ப்பிருக்கிறதே. மனிதகுலத்துக்குச் சேவை செய்வதில் கிடைக்கும் இன்பம் அதில் முழுமனதுடன் ஈடுபட்டவர்களுக்கே தெரியும். எல்லாம் மனப்பக்குவத்திலேயே இருக்கிறது.

கல்லினுள் தேரைக்கும் கருப்பை உயிர்க்கும் வாழ்வளிக்கும் இறைவன் எந்த ஓர் உயிரையும் அனுதையாக விட்டுவைப்பதில்லை. தாய்தந்தையற்ற குழந்தைகளும் எப்படியோ வளர்ந்து பெரியவர்கள் ஆவதில்லையா? அனுதைப் பெண்களும் பிள்ளைகளும் திருமணமாகி, குடும்ப வாழ்க்கையில் ஈடுபடுவதில்லையா? எப்படிப் பார்த்தாலும் இறைவன் மனிதகுலத்துக்கு அளித்திருக்கும் இன்பங்கள் கோடிக் கணக்கானவை என்பதில் சந்தேகமேயில்லை. மானிடரை மகிழ்விப்பதற்கென்றே இறைவன் இவற்றைப் படைத்திருக்கிறுன் என்று கூறவேண்டும்.

இறைவன் வகுத்த வழிகளில் செல்பவர்கள் இந்த இன்பங்களை அனுபவிக்கவே செய்கிறுர்கள். அதற்கு மாருக நடப்பவர்கள் இறைவனை மறந்து வாழ்பவர்கள் இவற்றை அனுபவிக்க முடியாதுபோகலாம். அல்லதுஇந்தஇன்பங்களையே உணரமுடியாது போகலாம். அல்லது இந்த இன்பங்களையே துன்பங்களாக மாற்றிக்கொள்ளலாம். அதற்காக இறைவனையும், உலகத்தையும் தூற்றுவது பேதமை-அறியாமை.

வாழ்க்கை பொய், உலகே மாயம், உடல் பயனற்றது என்றெல்லாம் சில ஞானிகள் கூறியிருப்பது உண்மையே. வாழ்க்கையை மனிதன் வெறுக்கவேண்டும் என்பதற்காக அவர்கள் அப்படிக் கூறவில்லை. மனிதன் இறைவனை மறந்துவிடாமல் இருக்கவேண்டும் என்பதற்காகவே அவர்கள் அப்படிக் கூறிவைத்தார்கள். அவர்கள் கூற்றைத் தவருகப் புரிந்துகொண்டு வாழ்க்கையை நரகமாக்கிக்கொள்ளுவது மடமை.

மனிதப்பிறவி உயர்ந்தது நாம் உயர்ந்தவர்கள். நமது உடல் ஒரு பெருங்கோவில். நமது உள்ளம் மகத்தானது. நமது ஆன்மா தெய்வீகமானது. ஒவ்வொரு மனிதனும் இறைவனின் ஓர் அம்சமே. இதையே சுவாமி விவேகானந்தர், பகவான் இராமகிருஷ்ணர் போன்றுேர் நமக்கு அறிவுறுத்தியிருக்கிறுர்கள். மறைமலை அடிகள், திரு. வி. க. போன்ற அனு

(5ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# தவிப்பு

மதிவாணர், பொன்னூர் கிராமம் கண்ணுக்குப் புலப்பட்டதும் நடையைத் துரிதப்படுத்தினார். நடந்து நடந்து கால்கள் வலியெடுத்து உளைச்சலைக் கொடுத்தன. எங்கே, குடிமனை இல்லாத வெளியில் இராப்பொழுதைக் கழிக்கநேர்ந்துவிடுமோ என்று ஏங்கிக்கொண்டிருந்தவருக்குக் கிராமவாடை வீசியதும் உள்ளம் மகிழ்வால் எம்பியது. 'கிராமம் என்றால் இது போல இருக்கவேண்டும்.' கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் வயல்வெளி. மத்தியில் குளம். சாக்கையும கொக்கும் இங்கொன்றும் அங்கொன்றுமாகப் பறந்து திரிந்தன. வானம் வயலின் அந்தத்தைத் தொட்டுக்கொண்டிருந்தது. மாலைச் சூரியன் ஒளிக்கிரணங்கள் பொன்குழம்பில் தோய்ந்து சிந்தின. அந்திவானம் பல நிறங்களுடன் செம்மை படர்ந்து இலங்கியது. குளுமையான 'இளங்காற்றின்' ஊதல் மதிவாணர் உடலைத் தழுவி அவர் களையைப் போக்கியது. மதிவாணர் கிராமத்தின் இயற்கைவனப்பில் மனம் லயித்தவராக நடந்து கொண்டிருந்தார்... அவர் மனம் தீர்மானித்துக் கொண்டது! 'ஊர்மனை நெருங்கிவிட்டது. நிச்சயம் கோவிலுக்குக் குறைவிருக்காது. இராப்பொழுதைக் கழித்துவிட்டால் நாளை ஊரில் யாசித்துக்கொள்ளலாம்.'

மதிவாணர் தள்ளாடித் தள்ளாடி நடந்துகொண்டிருந்தார். இவ்வளவு தூரம் நடந்து ஊர்மனையை அடைய நேரிடும் என்று முன்கூட்டியே தெரிந்திருந்தால் வந்திருக்கவே மாட்டார். சக சந்நியாசிகள் வெவ்வேறு பாதைகளால் வருமாறு அழைத்தபோது அதனைக் கண்டிப்பாகமறுத்து, இந்தத் தடவை புதுப்பாதையால் கதிர்காமயாத்திரை செய்ய வேண்டும் என்று திட்டம் வகுத்துக்கொண்டார். புதிய கிராமங்கள் ஊடாக மாந்தரின் வாழ்க்கை முறைகளையும் மண் வாசனையையும் நுகர்ந்து பார்க்கவேண்டும் என்று நினைத்த மதிவாணரின் இருபதுவருடசந்நியாச வாழ்க்கையில் கிடையாத வாய்ப்பு இந்தத் தடவை கைகூடியதில் அவருக்குஅளவில்லாத மகிழ்ச்சி. சக சந்நியாச நண்பர்களிடத்தில், "இந்தத் தடவை நான் ஏமாறமாட்டேன். கால்நடையாச் சுற்றி நடந்து ஆடித்தீர்த்த உற்சவத்திற்கு உங்கள் எல்லோரையும் கதிர்காமத்தில் சந்திக்கிறேன்" என்று சொல்லிவிட்டார். காலையிலிருந்துநடக்க ஆரம்பித்தவர் மனிதசஞ்சாரமற்ற வழியாக நடையாக நடந்து பொன்னூர் கிராமத்தை அடைந்துவிட்டார். ஊர்க்கோடியை அடைந்ததும் மனத்தில் தெம்பு பிறந்தது. அறுபது வயதுக்கிழவருக்கு முப்பது வயது வாலிபத்தைரியம் வந்துவிட்டதுபோன்ற பிரமை.

மாலை மங்கி இருள் பரவத்தொடங்கியது. பறவைகள் கீதம் இசைத்துத் தலைக்கு மேலாகப்பறந்தன. பசுக்கள் தெருவோரப் புல்லைமேய்ந்தவாறு நடந்தன. உழவர்கள் வீடுகளுக்குப் போகிறார்கள் போலும். மதிவாணர் நடந்து கொண்டிருந்தார். இருளடைவதற்கு முன்னர் எங்கேனும் ஒரு ஸ்தலத்தை அடைந்து களைத்துப்போன உடலுக்குச் சற்றே ஆறுதல் கொடுக்க வேண்டுமென்பது அவர் ஆசை.

மசுகளும் குடிசைகளுமாக ஆங்காங்கு வீடுகள் தென்பட்டன. கால்வாதக் கோளாறினால் மேலும் நடக்கவொட்டாமல் சில நேரம் நின்றுநிமிர்ந்துநின்று பார்த்த மதிவாணருக்கு எதிரில் மண்குடிசை கண்ணுக்குப்புலப்பட்டது சிறிது நேரம் நின்றுகொண்டிருந்த அவர் செவியில் பின்னாலிருந்து வந்த இனிய குரலோசைதேனுகப்பாய்ந்தது.

"சுவாமிகள் யாரைப் பார்க்கவேண்டும்?"

பெண்ணின் குரல்தான். குரல் வந்த பக்கம் திரும்பினார் மதிவாணர். எதிரில் இளம்பெண் புன்முறுவல் பொலிய இடுப்பிலே தண்ணீர்க்குடத்தை அணைத்தபடி நின்றிருந்தாள். அவர் தமது அடித்தொண்டைக்குள் எதையோ முணுமுணுத்துவிட்டு, "கோயிலைச் சேர எவ்வளவு தூரம் போக வேண்டும்" என்று அவளிடத்தில் வினவினார்.

எதிர்க் குடிசையிலிருந்து குரல் தெளிவாக வந்தது. "மீனு, என்ன செய்துகொண்டிருக்கிறாய்?"

"சுவாமியாருக்குப் பதில் சொல்லுகிறேன் அம்மா!" என்று சொன்ன மீனு கலகலவென்று நகைத்துவிட்டு, "சுவாமி ஊருக்குப் புதிதாக வந்திருக்கிறீர்கள் போல் தெரிகிறது. இன்னும் இரண்டு பர்லாங் தூரம் சென்றால் ஐயனார் கோவிலைச் சேர

வேண்டும்" என்று மதிவாணர் தமக்கு வேண்டியிருந்த குறையைப் பூசகரிடத்தில் முறையிட்டார்.

"இந்த ஊரில் தங்குகிற வரையில் இங்கேயே இருக்கலாம்" என்று சொல்லி கையிலிருந்த பொட்டலத்தை அவரிடத்தில் கொடுத்துவிட்டுப் பூசகர் போய்விட்டார். மதிவாணர் தோளிலிருந்த காவி வஸ்திரத்தை முடிந்து ஆக்கப்பட்ட பையை இறக்கி வைத்துவிட்டு, தூணோடு முதுகைச் சார்த்தி மெதுவாக உட்கார்ந்தார். விளக்கின் மங்கல் வெளிச்சத்தில் தலையில்லாக சூர வாகனம் நெஞ்சை நிமிர்த்தி நின்றிருந்தது தெரிந்தது.

"சிவ சிவ...!"

மதிவாணர் படுக்கையில் சரியும்போது மெதுவாக முணுமுணுத்துக் கொண்டார்... கால்கள் வலியெடுத்தன. பொன்னூர் கிராமம் அமைதியில் அடங்கிவிட்டதை மிக இலகுவில் உணர்ந்துகொண்டார். உறக்கம் கண்ணை மொய்த்தது.

காலையில் நித்திரை விட்டு எழுந்தபோது நன்றாகப் பொழுது புலர்ந்திருந்தது. "சிவ...சிவ...!" என்றபடியே விழித்தார்.

சத்தம் மெதுவாக அவர் தொண்டையில் தடைப்பட்டது. உடம்பு மிகவும் இலேசாக இருந்தது. கால்களில் எடுத்த வலி என்ன மாயமாகத் தான் மறைந்ததோ—!! ஆனாலும் அவர் மனம் கலக்கமுற்றது. நடுராத்திரியில் அவர் கண்ட கனவு அவர் மனத்திரையில் அழியா ஓவியமாகப் பளிச்சிட்டது. அதைப் பயம் என்றோ கெட்ட சொர்ப்பனம் என்றோ அவரால் தீர்மானிக்க முடியாமலிருந்தது. கனவை அவர் அசைபோடலானார்.

நடுத்தர வயது மதிக்கத்தக்க பெண். கையில் இரும்புச்சங்கிலி சுமந்து அவர் எதிரில் வருகிறாள். அவள் கூந்தல் கலைந்து முதுகில் புரள்கிறது. கையிற் கருவளையல்கள் அலுங்குகின்றன. இரும்புச்சங்கிலியை மதிவாணர் கையில் திணிக்கிறாள். மதிவாணர் ஏன் என்று கேட்கமுன்னரே அவள் வேகமாகச் ... டாள். 'தங்கம் தங்கம்' என்று

— சி. சண்முகவடிவேல் —

## கடமை நெஞ்சம்

— மாவை. நித்தியானந்தன் —

*(கப்பற் தட்டில் நிற்குமாறு தனயனுக்குக் கட்டளையிட்டுவிட்டுப் போரில் ஈடுபட்ட தந்தை மாண்டு போகிறார். சிறுவனோ இதனை அறியான்...)*

தந்தை தந்த ஆணை காத்துத்
தனயன் தனியே நின்றான்
செந்தீ சூழுங் கப்பல்!-அங்கே
சிந்தை தவிக்க நின்றான்!

நகைச்சுவைக் கதை

# இராசிப்பலன்

குமார் தனபால்

"விடிஞ்சதும் விடியாததுமாகத் தேத்தண்ணி கூடக் குடிக்காமல் வெளியாலை எங்கை போறியள்?" தெருப்படலையைத் திறக்கப் போன நான் தலையைமாத்திரம் திருப்பிப்பார்த்தேன். என் படிதாண்டாப் பத்தினி குசினியைத் தாண்டிவந்து நின்று என்னை இப்படிக் கூப்பிட்டாள்.

"வெளியாலை வெளிக்கிடேக்கை பிறத்தாலை கூப்பிடாதை எண்டு உனக்கு எத்தினை நாள் சொல்லிப்போட்டன்?" - அவள் கேள்விக்கு இப்படிச் சீறிவிழுந்து பதில் கொடுத்துவிட்டு, வெடுக்கெனப் படலையைத் திறந்து சந்தியை நோக்கிப் போய்க்கொண்டிருந்தேன்.

தினமும் விடிந்ததும் அன்றைய பத்திரிகையில் என் இராசிப்பலனுக்கு என்ன பலன் எழுதியிருக்கிறார்கள் என்று பார்த்துவிட்டு, அந்த மனத்தெம்புடன்தான் அன்றாடக் கடமைகளில் இறங்குவேன். காலைக்கடமைகளில் இதுவும் எனக்கொன்றாகி விட்டது.

சந்தியில் இருக்கும் நூல் நிலையத்திற்குள் நுழைந்த நான் என் அபிமானப் பத்திரிகையான 'ஆலாவர்ணத்தின்' பக்கங்களைப் படபடவெனப் புரட்டினேன். 'இதோ இராசிப்பலன் பக்கம் தென்படுகிறது.'

கடகம், சிங்கம், கன்னி, துலாம்... ஆ... துலாம்தான் என் இராசி. என்ன பலன் எழுதியிருக்கிறார்கள்...? ஆவலுடன் படிக்கத்தொடங்கினேன்.

"இந்த இராசிக்காரர்களுக்கு இன்று தேகநலனும் குடும்பசந்தோஷமும் பணவரவும் மனைவி மக்களால் சுகமும் கிட்டும்"- ஆஹா! இன்று என் இராசிப் பலனுக்கு எல்லாமே நலம்தான்! குடும்பசந்தோஷமாம், பணவரவாம் அதுவே போதும்! நீரில் ஊறப்போட்ட றோஸ் பாண் துண்டுபோல் மனம் பூரிக்க நூல் நிலையத்தை விட்டு வீடுநோக்கி வந்துகொண்டிருந்தேன்.

வீட்டில் மனைவியைக் காணவில்லை. வழமையான ஆத்திரம் பொத்துக்கொண்டுவந்தது. "அடியே, தவமணி...!" என்று தொண்டை கிழியக் கத்தியிருப்பேன். ஆனால்...இன்று என் இராசிப் பலனுக்கு குடும்ப சந்தோஷம் என்றிருக்கும் போது இப்படி அவளை அழைத்து குடும்ப சச்சரவை ஏற்படுத்த விரும்பாததால் ஆத்திரத்தை ஒருவாறு அடக்கிக்கொண்டேன்.

"விடியமுந்தி றேட்டுலாத்த வெளிக்கிட்டுடுவார் சாமான்சக்கட்டை வாங்கிப் போட்டாத்தானே மத்தியானத்துக்கிடையிலை நானும் அவிச்சுக்கொட்டலாம்."- அடுத்த வீட்டிலிருந்தே இப்படிப் 'புறுபுறு'த்துக் கொண்டே வந்தாள் என் பதிவிரதை.

"இண்டைக்கு என் இராசிப்பலனுக்கு குடும்ப சந்தோஷம், பணவரவு என்று எல்லாமே நல்லதாக எழுதியிருக்கிறார்கள்... நீ இப்படி விடியக்காலமை என்னோடை ஏன் கொழுவலை இழுக்கிறாய்?" சமாதானக் கொடி காட்டினேன் நான்.

"அதுதான் இல்லை! அடுத்த வீட்டு ஐயாத்துரை வாங்கிக்கொண்டுவந்த பேப்பரிலை இப்பதான் பாத்திட்டுவாறன். இண்டைக்கு உங்கடை இராசிப்பலனுக்கு குடும்பசச்சரவு, பணநஷ்டம்...என்று எழுதியிருந்"

"ஐயய்யோ... நீ எந்தப் பத்திரிகையில் என் இராசிப் பலனைப் பார்த்தாய்?"

"'அமுதகானம்' பேப்பரிலைதான். ஒருநாளும் அந்தப் பேப்பர் பொய்ப்பலன் எழுதாது."

"எனக்கும் வடிவாகத் தெரியும், 'ஆலாவர்ணப் பேப்பரும் பொய்ப்பலன் எழுதியதே கிடையாது."

"இல்லை! 'அமுதகானம்' பேப்பர்தான் சரி!"-கொடுக்கிழுத்து கட்டாத குறையாக என்னைக் குஸ்திக்கழைத்தாள் மனைவி.

"கொஞ்சம் பொறடி! ஐயாசாமி எழுதும் 'அமிழ்தம்' பத்திரிகையில் என் இராசிப்பலன் எப்படி எழுதியிருக்கிறார்கள் என்று பார்த்துவிட்டு குடும்ப சச்சரவைத் தொடங்குவோமா, விடுவோமா என்று சிந்திப்போம்."

ஐயகோ ... இன்று என் இராசிப்பலன் இப்படிப் பத்திரிகைக்குப் பத்திரிகை மாறி மாறிக் கிடக்கிறதே! இதுவும் என் இராசிப் பலன்களில் ஒன்றா?

(யாவும் கற்பனை)

# காலத்தால் சாகாத இலக்கியம் படைப்பவனே சிறந்த புலவன்

தமிழ்மொழி இலக்கியங்களுள் திருக்குறள் ஒரு தனிசிறப்புடையது என்பது யாவர்க்கும் ஒப்ப முடிந்ததோர் உண்மை. உலகத்துப் பல்வேறு செம்மொழிகளிலும் திருக்குறள் மொழி பெயர்க்கப்பட்டமையே அதன் பெருமைக்கு அறிகுறியாகும். இலக்கியங்களுள் சிறந்த திருக்குறளைக் சங்கப் புலவர்கள் ஆய்வு செய்தனர். அவ்வாய்வுரைகள் திருவள்ளுவ மாலை எனப்படும். திருவள்ளுவ மாலையின்கண் உள்ள வெண்பாக்களே சிறந்த செய்யுட்கள் என்பதற்கு ஐயமில்லை. அவற்றுள் இரண்டை ... நோக்குவாம்.

ஓதற் கெளிதாய் ... உணர்
...ற் கரிதாகி

நலந்துலங்க உரைத்தலைக் காண்க.

### கவியின் நோக்கம்

உருசிய தேயத்து ஆய்வு வல்லோன் தலத்தோய் என்பவர், புலவன் தன் அனுபவத்தைப் பிறருடைய உள்ளத்தின் கண் தூண்டுதலே புலமை என்பார். தான் அடைந்த ஓர் அநுபூதியைப் பிறரும் உணர்ந்து அனுபவிக்கத்தக்க வண்ணம் செப்புதலே கவியின் நோக்கமாகும் என்பர். ஒரு பூதப் பொருளை ஒருவன் வேறொருவனுக்கு அளித்தல்போல் புலவன் தன் அனுபவத்தைப் பிறருடைய உள்ளத்தில் பதியச் செய்தல் வேண்டும். செய்யுள் இயற்றும் கவிஞன் தான் கையாளும் கருத்துருவங்கள்மூலம் பிற

இக்குறளின் கருத்து கருத்துருவங்களாக இளங்கோவடிகளால் வருணிக்கப் படுதல் காண்க:

"மாசறு பொன்னே
வலம்புரி முத்தே
காசறு விரையே
கரும்பே தேனே
அரும்பெறற் பாவாய்
ஆருயிர் மருந்தே"

ஒளி, ஊறு, நாற்றம், சுவை, ஓசை என்பவற்றின் சொல்லரிய நலத்தை இவ்வடிகள் சுட்டும்.

ஒரு மாபெரும் புலவனை இன்னொரு மாபெரும் புலவனே ஆய்வுசெய்ய வல்லவனுவன் என்பது இவ்வாய்வு நோக்குதலால் புலப்படும். இலக்கியப்பாடல் சிலவற்றை "இலக்கிய விலக்கண ஆய்வுரைகள் என்னும் நூலின்கண் ...

யவை காரணமாகச் சில இலக்கியங்கள் பெரிதும் போற்றப்படுதல் உண்டு. பின்பு காலஞ்செல்ல அச்சூழல் மாற்றமடைய அவ்விலக்கியங்கள் மறக்கப்படும். எக்காலத்திலும் பாராட்டப்படும் இலக்கியங்களை இயம்புவோர் சிறந்த புலவராவர் என்பதில் ஐயமில்லை. ஒரு பாடல் திறமையுடையதெனப் பாராட்டப்படின் அதை இயம்பிய புலவன் கற்பனையாற்றல் உடையோனாகத் திகழ்வன். கற்பனையாற்றல் தெய்வத்தால் கொடுக்கப்படும் ஆற்றலெனக்கொள்ளுதல் உண்டு. மக்கள் தம் ஆராய்ச்சியால் அளந்தறியாத ஆற்றல்களைத் தெய்வீக ஆற்றல் என்பது வழக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கப்பற் தட்டில் நிற்குமாறு தனயனுக்குக் கட்டளையிட்டுவிட்டு போரில் ஈடுபட்ட தந்தை மாண்டு போகிறார். சிறுவனோ இதனை அறியான்...)

தந்தை தந்த ஆணை காத்துத்
தனயன் தனியே நின்றான்
செந்தீ சூழுங் கப்பல்!-அங்கே
சிந்தை தவிக்க நின்றான்!

அந்தோ, அந்தத் தந்தை -போரில
ஆவி நீத்துப் போனார்!
இந்தச் சேதி தெரியா-மைந்தன்
எரியும் தட்டில் நின்றான்!

'தந்தாய்! இந்தத் தட்டை-விட்டு
தப்பிச் செல்லல் தவறு?
எந்தன் மேல்நீ இட்ட-ஆணை
இன்னும் நிறைந்த திலையா?

அலறிக் கேட்டான் பையன்-பதிலோ
அதிரும் பீரங் கிகளே!
நலியுங் கப்பல் விட்டே-மற்றோர்
நழுவிப் போய் விட்டனரே!

பாவம், தந்தை வந்து-தன்னைப்
பணித்தா லன்றி விலகான்.
தாவிச் சூழுந் தீயோ-அவனைத்
தாக்கப் போகின் றதுவே!

உயரத் தசையுங் கொடியும்-எரிய
ஓங்கிச் சீறும் வெந்தீ?...
உயிரின் பற்றால் இறுதித்-தடவை
உரத்துக் கேட்டான் சிறுவன்:

''தந்தாய்! சொல், சொல்! இனியும்-இங்கே
நிற்கத் தானா வேண்டும்?''
அந்தோ! மற்றக் கணமோ-இடியின்
அதிரல்! கப்பல் தூளே!!

எங்கே பையன்? தந்தை-சொல்லை
இறக்கும் வரைகாத் தானே!
எங்கே இளைய வீரன்?-கடமை
நெஞ்சம் எங்கே யம்மா?

(''கசபியன்கா'' என்ற புகழ்பெற்ற ஆங்கிலக் கவிதையைத் தழுவியது.)

[illegible] சொல்லுகிறேன் அம்மா!' என்று சொன்ன மீனா கலகலென்று நகைத்துவிட்டு, ''சுவாமி ஊருக்குப் புதிதாக வந்திருக்கிறீர்கள் போல் தெரிகிறது. இன்னும் இரண்டு பர்லாங் தூரம் சென்றால் ஐயனார் கோவிலைச் சேரலாம் வாருங்கள் தாகசாந்தி செய்துவிட்டுப் போகலாம்'' என்று சொல்லி அழைத்தாள். அடுத்த கணம் அவர் பதிலுக்கும் காத்திராமல் 'விர்' ரென்று சாத்தியிருந்த தட்டியைத் திறந்து வீட்டினுள் நுழைந்தாள். மதிவாணர் மந்திரத்தால் கட்டுண்டவர்போலச் சிறிது நேரம் அசைவற்று நின்றார். 'மீனா யார்? அவளுக்கும் எனக்கும் என்ன உறவு?' அவர் மார்பு முட்டிப் பெருமூச்சு வெளிப்பட்டது. மாந்திரீகனின் வசியத்திற்கு ஆளானவரைப் போல மதிவாணர் மீனா சென்ற வழியில் தட்டியைத் திறந்து அவள் பின்னால் நடந்தார்.

மதிவாணர் கோயிலை அடைந்தபோது பொழுது நன்றாகக் கழிந்துவிட்டது. வானமுகட்டில் ஒட்டியிருந்த தாரகைகள் பூமி தேவியைப் பார்த்துக் கண்சிமிட்டின. கோயில் வாயிலில் தேங்காய் நெய் விளக்கு காற்றின் ஊதலுக்குப் பணிந்து அசைந்தாடியது. எதிரில் திறப்புக் கோர்வை சப்திக்க வந்து கொண்டிருந்த பூசகர் மதிவாணரைப் பார்த்து, ''யாரது'' என்றார்.

''சந்நியாசி. கால்நடையாகக் கதிர்காமயாத்திரை. இந்த ஊருக்கு முன்னெப்போதும் வந்ததில்லை. இராத்திரிப் படுக்கைக்கு இடம்

[illegible]கள் அலுங்குகின்றன. இரும்புச் சங்கிலியை மதிவாணர் கையில் திணிகிறாள். மதிவாணர் ஏன் என்று கேட்குமுன்னரே அவள் வேகமாகச் சென்று மறைந்துவிட்டாள். மதிவாணரோ 'தங்கம் தங்கம்' என்று கத்த உன்னுகிறார். சத்தம் வெளிவரவில்லை. நெஞ்சிற்குள் அடைபட்டு நிற்கிறது. அடுத்தகணமே அவள் தலையை விரித்தபடியே கையிற் குழந்தையுடன் ஓடி வருகிறாள். குழந்தையை மதிவாணர் காலடியில்கிடத்துகிறாள். அந்தக் குழந்தையைக் கறுப்புத்துணியால் மூடினாள். வேறொரு கறுப்புத்துணியால் தனது முகத்தை மறைத்து மூடினாள். மதிவாணர் இரும்புச் சங்கிலி பிடித்திருந்த கரத்தைஅவள் தன்கையால் பற்றி, ஆவேசம் வந்தவளாக, ''என்னையும் குழந்தையையும் கொன்றுவிடுங்கள் ... கொன்றுவிடுங்கள்'' என்று குரலெடுத்துக் கத்தினாள். மதிவாணர் பீதியினால் 'வேண்டாம், தங்கம்' என்று கத்தத்துடிக்கிறார் சத்தம் வெளிவர மறுத்துவிட்டது. கைகளைத்தரையில் போட்டு அடித்தார்....கையில் கைத்தடி அகப்பட்டது.

அத்துடன்விழித்துக்கொண்டார். கனவு கலைந்துவிட்டது.

''பழைய நினைவு'' எனத் தமக்குள் சொல்லிக்கொண்டார்.

''சாமியார் தியானத்தில் இருக்கிறார். இரையாமல் வாருங்கள்'' என்று பின்னாலிருந்து வந்த குரலைக்கேட்டு மதிவாணர் திரும்பினார். என்ன ஆச்சரியம்... எதிரில் கண்ட காட்சி அவரையே நம்பமுடியாமல் வைத்தது. இராத்திரிக் கண்ட கனவின் தொடர்தானோ என ஒரு கணம் ஐயுற்றார். அவர் கண்களை நம்ப அவருக்கே சந்தேகமாக இருந்தது. எதிரில் பூசகர் பழம், பாக்கு வெற்றிலையுடன் நின்றிருந்தார். அவர் பின்னால் ஐம்பது அறுபது குடியானவர்கள் ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமாக முண்டியடித்து. மதிவாணரை வைத்த கண் வாங்காமல் பார்த்து நின்றார்கள்.

''உங்களைப்பற்றி இராத்திரியே இவர்களிடத்தில் சொன்னேன். உடனேயே பார்க்கப் புறப்பட்டார்கள். இரவில் உங்களுக்குத் தொந்தரவு கொடுக்கக்கூடாது என்று சொல்லி இப்போது அழைத்துவந்தேன். இவர்கள் இந்த ஊர்க்காரர்கள். எல்லோரும் வயல் தொழிலாளிகள்'' என்று பூசகர் தாம் வந்த காரணத்தை மதிவாணரிடத்தில் விளக்கினார். மதிவாணர், பூசகர் இரு கைகளாலும் நீட்டிய மங்களப்பரிசை ஏற்றுக்கொண்டார். வந்தவர்கள் எல்லோரும் கைகூப்பி மதிவாணருக்கு வணக்கம் செலுத்தினார்கள். அவர்களில் வயதானவன் ஒருவன் தொண்டையைக் கனைத்துக் கொண்டு, ''சாமியாரை எங்களுக்குப் பிடித்துவிட்டது. இங்கேயே இருக்க வேண்டும். உங்களுக்கு வேண்டியதை எல்லாம் நாங்களே கொண்டுவந்து கொடுக்கிறோம்' என்று முன்னுக்கு வந்து நின்று சொன்னான். அவன்சொல்லுவதைஆலோதிப்பது போல எல்லோரும் தலையசைத்தார்கள்.

காலையில் சாமியாருக்குத் தொல்லை கொடுக்கக்கூடாது என்றும் பின்னர் சாவகாசமாக வந்து பார்த்துக்கொள்ளலாம் என்றும்வந்தவர்கள் எல்லோரும் ஒன்று கூடித் தீர்மானம் செய்தார்கள். மதிவாணருக்கு மீண்டும் எல்லோரும் தனித்தனியாக வணக்கம் செலுத்திவிட்டுக் கலைந்துசென்றார்கள்.

(அடுத்தவாரம் முற்றும்)

எனப்படும். திருவள்ளுவ மாலையின்கண் உள்ள வெண்பாக்களே சிறந்த செய்யுட்கள் என்பதற்கு ஐயமில்லை. அவற்றுள் இரண்டை ஈண்டு நோக்குவாம்.

ஓதற் கெளிதாய் [illegible] உணர்
தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிக
விளங்கித் --தீதற்றோர்
உள்ளுதொ றுள்ளுதொ
றுள்ள முருக்குமே
வள்ளுவர் வாய்மொழி
மாண்பு

இதுமதுரைக்காஞ்சி இயம்பிய மாங்குடி மருதனாருடைய வெண்பா. கற்றோர்க்கும் மற்றோர்க்கும் இலகுவில் புலப்படும் வண்ணம் ஆய்வுக் கருத்தை இவ் வெண்பா இன்னோசையுடன் விளம்பும். உள்ள முருக்கும் என்னும் கருத்து உணர்ச்சியை எழுப்பும்.

## செய்யுள் திறனாய்வு

சாற்றிய பல்கலையும்
தப்பா அருமறையும்
போற்றியுரைத்த பொரு
ளெல்லாம்- தோற்றவே
முப்பான் மொழிந்த
முதற்பா வலரொப்பார்
எப்பா வலரினு மில்.

திருவள்ளுவர் உலகப் புலவர்களுள் தலைசிறந்தவர் என நெய்தல் பாடுதலில் ஒப்பாரு மிக்காருமின்றித் துலங்கும் நல்லந்துவனார்

[illegible] பொருளை ஒருவன் வேறொருவனுக்கு அளித்தல்போல் புலவன் தன் அனுபவத்தைப் பிறருடைய உள்ளத்தில் பதியச் செய்தல் வேண்டும். செய்யுள் இயற்றும் கவிஞன் தான் கையாளும் கருத்துருவங்கள்மூலம் பிறருடைய உள்ளத்தின் கண் உணர்ச்சி தோன்றும் படி தூண்டுதல் கூடும். இவ்வாற்றல் சிறந்த புலவர்களுடைய பாடல்களில் மிளிர்தலைக் காணலாம்.

ஒருவருடைய உள்ளம் பிறருடைய உள்ளங்களோடு மனோவுலகில் அளவளாவிக் கலத்தலால் தனது நுகர்வைப் பிறர்க்கு அளிக்கும் என்பது பொருந்தாக்கூற்று என்போம். ஈருள்ளங்கள் ஒத்த அனுபவம் உடையவெனின் அந்நிகழ்ச்சி தற்செயலாய் ஏற்பட்டதாகும். ஓர் உள்ளம் பிறிதோர் உள்ளத்திடமிருந்து நன்கொடையாகத் தன் அனுபவத்தைப் பெற்றதெனக் கருத இடமில்லை. உள்ளங்கள் தத்தம் உலகில் தனித்தனியே இயங்கும். எனினும் ஒருபுலவன் தன் உணர்ச்சியைக் கருத்துருவங்கள்மூலம் பிறருடைய உள்ளத்தின்கண் தூண்டுதலை அறிவேம். மலைக்காட்சி, ஆற்றுக்காட்சி, சந்திரோதயம், சூரியோதயம் என்றாற்போன்ற ஓர் இயற்கையழகைபுலவன் கருத்துருவங்கள்மூலம் செய்யுளின்கண் வர்ணிப்பான். அக் கருத்துருவங்கள் செய்யுளைக் கற்போனுடைய உள்ளத்தின்கண் அவ்வழகை நுகரும் ஆற்றலை உதிக்கச் செய்யும். பிறருடைய உணர்ச்சியைத் தூண்டும் ஆற்றல் உடைய கருத்துருவங்களை ஆக்கும் வல்லமை உடையோனே செந்நாப் புலவன்.

இவ்வண்ணம் காதலின் இயல்பை வள்ளுவரும் கம்பரும் வருணித்தலை நோக்குக.

''கண்ணொடு கண்ணினை
நோக்கொக்கின்
வாய்ச்சொற்கள்
என்ன பயனு மில.''
''எண்ணரு நலத்தினாள்
இணைய னின்றுழிக்
கண்ணொடு கண்ணினைக்
கவ்வி யொன்றையொன்று
உண்ணவு நிலைபெரு
துணர்வு மொன்றிட
அண்ணலு நோக்கினா
னவளு நோக்கினாள்.''

இருபெரும் புலவரும் காதற் சுவையைச் சொல்லோவியமாக வருணித்தலைக் கண்டு இன்புறுகின்றோம்.

தலைமகளின் நலம் புனைந்துரைத்தலை நோக்குவாம்.
''கண்டுகேட் டுண்டுயிர்த்
துற்றறியும் ஐம்புலனும்
ஒண் டொடி கண்ணேயுள''

ஒரு மாபெரும் புலவனை இன்னொரு மாபெரும் புலவனே ஆய்வுசெய்ய வல்லவனவன் என்பது இவ்வாய்வு நோக்குதலால் புலப்படும். இலக்கியப்பாடல் சிலவற்றை ''இலக்கிய விலக்கண ஆய்வுரைகள் என்னும் நூலின்கண் சிறிது விளக்கியுள்ளேன்.

### செந்நாப்புலவர் யார்?

உணர்ச்சியை விழுமிய தாக்கலும் கற்பனையாற்றலை விரியச் செய்தலும் கருத்துக்கு எழுச்சியைப் படைப்பதும் வல்ல ஆசிரியரே செந்நாப் புலவர் ஆவார் என்பது ஆங்கிலப் புலவன் ஷெல்லியின் உரை. இலத்தின் மொழிப்புலவன் ஒருசு, கவி படிப்பனையை உரைத்தல் வேண்டும் அன்றேல் உள்ளத்தை இன்புறுவித்தல் வேண்டும் என்பர். தமிழ்மொழிக்கு அழியாப் புகழை அளிக்கும் முப்பெரும் புலவர் தந்த இலக்கியங்கள் உலகத்துச் சிறந்த செம்மொழிகளிலுள்ள இலக்கியங்களிலும் சிறந்தவையாகும். ''யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல், வள்ளுவன் போல், இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை. உண்மை வெறும் புகழ்ச்சியில்லை'' என்றார் சுப்பிரமணிய பாரதியார் பாரதியாரின் 'தமிழ்நாடு' தமிழ் என்னும் கவிகள் தாய்நாட்டுப் பற்றையும் தாய்மொழிப் பற்றையும் முப்பெரும் புலவரின் பெருமையையும் எளிய செஞ்சொல்லால் இசைத்தலால் மக்கள் மனதைக் கொள்ளை கொள்வன.

செய்யுளைச் சுவைத்தலின் உளவியல்:-

சில பாடல்கள் கற்பனையாற்றல் நலம், வண்ண நலம் என்பவை இல்லாவிட்டாலும் கருத்துநலம் உடைமையால் எக்காலத்தும் சுவைக்கப்படும். இத்தகைய இலக்கியங்கள் என்றும் உண்மையான கருத்துக்களை எளிய செஞ்சொற்களால் தெளிவாகக் கூறுவனவாகும். மக்கள் யாவர்க்கும் பொதுவாகவுள்ள இயல்புகளையும், நாட்டங்களையும், இலட்சியங்களையும் கூறும் பாடல்கள் எக்காலத்திலும் இரசிப்போரின் மனத்தைக் கவர்தல் விநோதமன்று. ஒரு காலத்தில் மாத்திரம் போற்றப்பட்டுப் பிறிதொரு காலத்தில் மறக்கப்படும் இலக்கியங்கள் தமது காலப்போக்கை வர்ணிக்கும் திறமையுடையனவாக இருக்கலாம். அரசியற்சூழல், சமயச்சூழல், வற்கடநிலைமை பண்பாட்டுநிலைமை, முதலி

இயம்பிய புலவன் கற்பனை யாற்றல் உடையோனாகத் திகழ்வன். கற்பனையாற்றல் தெய்வத்தால் கொடுக்கப்படும் ஆற்றலெனக்கொள்ளுதல் உண்டு. மக்கள் தம் ஆராய்ச்சியால் அளந்தறியாத ஆற்றல்களைத் தெய்வீக ஆற்றல் என்பது வழக்கம். புலவன் ஒருவன் தன் கற்பனையாற்றலால் சிறந்த கருத்துருவங்கள் அமையப் பாடல்களை ஆக்கித்தருவான். உவமையணிகளை உபயோகித்தலும் ஒரு கருத்துருவமாகும். பொதுமக்கள் காணாத அழகையும் உண்மையையும் ஒழுக்கச் சிறப்பையும் புலவன் தன் கற்பனை வல்லமையால் காணுதல்கூடும். பொதுவாகக் காணும் பொருட்களில் ஒரு புதுமையைக்காணுதலே கற்பனையாற்றல் என ஆங்கிலப் புலவன் கொலறிச்சு உரைத்தனர் என்றும்.

த இராமநாதபிள்ளை

(பி. ஏ. லண்டன்)

ஒரு புதுமையைக் கருத்துருவங்கள்மூலம் வருணிக்கும் வல்லமையின் உள்வியல்பு யாதென அறிதல் நன்று. உளத்தின் அறியுந்தொழிலில் அறிதல் உணர்தல் முயலுதல் என முக்கூறு உண்டென்பர் உளவியல் அறிஞர். இம்முக்கூறும் வெளிப்படையாகவும் மறைதொழிலாகவும் நடைபெறுதல் உண்டு. மறைதொழில் எமது உணர்வுக்குத் தெரியாமல் நடைபெறுவது; அது உளநோக்குவோர்க்குப்புலப்படும். உள்ளம் அனுபவம் பதிந்திருக்கும் பதிவுத் தொடர்களுடன் சம்பந்தப்பட்டிருக்கும். இப்பதிவுத் தொடர்கள் மூளையிலுள்ள நுண்ணிய நரம்புப் பின்னமாகும். பதிவுத்தொடர் பற்றிய ஒருபரிசோதனையை உருசிய உளவியல்வல்லோர் பவிலவ்என்பவர்செய்தனர். பவிலவ் என்பவர் தன் நாய்க்கு உணவளிக்கும் போது மணிதட்டுதல் வழக்கம். உணவைக்கண்டு உமிழ்நீர் ஊற்றும் நாய் உணவளிக்கப்படாவிட்டாலும் மணியோசை கேட்டவுடன் உமிழ்நீர் சுரக்கும். இப்பரிசோதனையால் நாயின் மூளையில் ஒரு பதிவுத்தொடர் பதிவெய்தியுள்ளதென்பது தெரியும். இப்பதிவுத் தொடர்களில் பதிவெய்தியிருக்கும் ஞாபகவுணர்ச்சிகளை புலவன் எழுப்புவன்.

(தொடரும்)


# தம்பி அன் கோ.,

வண்ணார்பண்ணை :-: யாழ்ப்பாணம்.

ரூ. 1000/- தொடக்கம் ரூ. 10000/- வரை

தவணை வைப்புக்கு (Call Deposits)
கீழ் குறித்த வட்டி கொடுக்கப்படும்.

7 நாள் அறிவித்தலில் எடுப்பதற்கு வருடம் 7 சத வீதம்

30 நாள் அறிவித்தலில் எடுப்பதற்கு வருடம் 9 சத வீதம்

வட்டி ஒவ்வொரு வருடமும் கொடுக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்நாட்டு கலைஞர்



# அண்ணாமலையில் சாதனை செய்த 'இசைமணி!'

ஐந்து வருடத்தில் பயிலவேண்டியதை ஒரே வருடத்தில் பயின்று பட்டம் பெற்று தமிழ்நாட்டில் நம்மவர் திறமையையும், ஆற்றலையும் எடுத்துக்காட்டியவர்தான் 'இசைமணி' வ. செல்லத்துரை!

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நான்குவருடம் பயின்று 'சங்கீதபூஷணம்' தேர்வில் சித்திபெற்றவர்கள்தான், அடுத்து 'இசைமணி' பட்டம் பெறுவதற்கான ஒரு வருடப் பயிற்சிக்கு அனுமதிக்கப்படுவார்கள். ஆனால் நம் நாட்டுக் கலைஞரான செல்லத்துரை இங்கிருந்து அங்கு சென்றதும், 'சங்கீத பூஷணம்' இறுதிப்பரீட்சைக்கு தோற்றி, சித்திபெற்றதுடன், ஒருவருடம் 'இசைமணி'ப் பட்டத்துக்கான வகுப்பில் பயின்று முதல் வகுப்பில் தேறினார்!

தமிழ்நாடே இவர் திறமை கண்டு வியந்தது; மனந்திறந்து பாராட்டியது!

தெல்லிப் பழையிலுள்ள கொல்லங்கலட்டியில் பிறந்த இசைக் கலைஞர் செல்லத்துரை சின்ன வயதில் ஏற்பட்ட 'சங்கீதப் பைத்தியத்தினால்' மாவிட்டபுரத்தைச சேர்ந்த நாதஸ்வரக்கலைஞர் உருத்திராபதியிடம் இசைபயின்றார். இயற்கையாகவே இவரிடமிருந்த இசைஞானம் இவர் எதிர்காலத்தில் சிறந்த இசைக் கலைஞராகத் திகழ்வார் என்பதை அப்போதே சொல்லாமல் சொல்லியது. வட இலங்கை சங்கீத சபையின் சங்கீதப் பரீட்சைகளில் 5 பகுதிகளிலும் சித்திபெற்றார்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் மூன்றலில் இவர் முதல் அரங்கேற்றம் நடந்தது. மாவைக் கந்தன் மீது இவர் அளவு கடந்த பக்தி கொண்டவர். முதல் அரங்கேற்றமே இவர் எதிர்காலத்தை கெட்டத் தெளிவாக நிர்ணயித்தது!

"நாடெங்கும் தமிழிசை பரவவேண்டும்; இசை எங்கும் ஒலிக்கவேண்டும்" என்று அடிக்கடி இவர் சொல்லிக்கொள்வார்

இலங்கை வானொலியில் 'ஏ' கிரேட் பாடகராக இருக்கிறார். ஏப்ரல் 7-ம் திகதி கடைசியாக இவர் குரல் கொழும்புரேடியோவில் ஒலித்தது. "பாடியவர் யாரோ?" என்று பாட்டு முடியும் வரை இருந்து பெயரைத் தெரிந்து கொண்டுசென்ற சங்கீதப் பிரியர்களையும் அறிவேன். அவ்வளவு நன்றாகப் பாடினார்!

நாடெங்கிலும் கச்சேரி நிகழ்த்திவருகிறார். மலைநாடு, கொழும்பு, திருக்கோணமலை, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் இவர் சங்கீத நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன.

தான் பயின்ற சங்கீதத்தை மற்றவர்களும் படித்து இசைஞானம் பெறவேண்டுமென விரும்பும் நல்லிதயம் கொண்டவர் இவர்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 'இசைமணி' வகுப்பில் பயின்றுவரும் போது, திரு. டி. கே. ரங்காச்சாரியாரிடம் குரு சிஷ்யமுறையில் இசை பயின்று தமிழ்நாட்டின் பகுதிகளில் அவருடன் இசைக் கச்சேரிகள் செய்ய வாய்ப்பு இவருக்கு கிடைத்திருக்கிறது. "அவர்தான் எனக்கு நல்லமுறையில் கச்சேரி செய்யும் அனுபவத்தைத் தேடித்தந்தார்" என்று கூறிக்கொள்கிறார்.

தற்போது இவர் எம். ஏ. கல்யாண கிருஷ்ண பாகவதரிடம் உருப்படிகள், தியாகராஜர் பஞ்சரத்தினங்கள் முதலியன நெட்டுருப் பண்ணிவருகிறார்.

வடஇலங்கை சங்கீதப் பரீட்சைகளுக்கு தோற்றும் மாணவர்களுக்கு சங்கீதம் சொல்லிக்கொடுக்கிறார்.

கவிஞர் மஹாகவியின் இசை நாட்டிய நாடகங்களில் இசைமணிசெல்லத்துரை பங்கெடுத்துவருகிறார்.

"கர்னாடகசங்கீதம் இப்போது ஈழத்தில் ஓரளவு வளர்ச்சியடைந்துவருகிறது" என்று மகிழ்ச்சி தெரிவிக்கும் அவர் எந்நேரமும் சங்கீதத்தைப் பற்றியே பேசிக்கொண்டிருப்பார்.

பழகுவதற்கு இனியவரான இவர் சங்கீதமும் கேட்பதற்கு இனிமையானதாக இருக்கும்.

பாமா

# அசலும் நகலும்

தமிழ் நாட்டு நடிக நடிகையரைப் போல் உங்களில் எத்தனையோபேர் இருப்பீர்கள்!

அவர்களைப் போன்ற முகவெட்டும் நடிப்பாற்றலும் கொண்டவர்களைத் தான் இங்கு குறிப்பிடுகிறேன்.

ஆனாலும் இதுவரைகாலமும் வெளியே தெரியாமல் இலைமறைகாயாக இருந்துவிட்டீர்கள்! இனியும் உங்களுக்கு அந்தக்கவலை வேண்டாம்! நாமும் அந்தக் கவலையைஉங்களுக்குவைக்கமாட்டோம்!

இதுவரை நீங்கள் ஒரு நாடகத்திலும் நடிக்காவிட்டாலும் பரவாயில்லை. உங்களிடம் நடிக்கும் ஆற்றல் இருக்கிறது. நீங்கள் உணர்ந்துகொண்டால்போதும். அத்துடன் ஒரு சினிமா நடிகரையோ நடிகையையோ ஒத்த முகவெட்டு இருக்கவேண்டும்.

நீங்கள்எமக்கு அனுப்பிவைக்கவேண்டியவை:

உங்கள் படத்துடன் யாரைப்போன்றிருக்கிறீர்கள், நீங்கள் நடித்த நாடகங்கள், வயது போன்ற தகவல்களையும் சேர்த்து 'அசலும் நகலும்', 'கலையரங்கம்' மே/பா, 'ஈழநாடு', த.பெ. இல: 49, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.


# கலை அரங்கம்

தயாரிப்பு: மேகலா

## 'அடிமைப்பெண்'ணை பார்க்க அண்ணா இல்லையே?

என் பிரமாண்டமான தயாரிப்பான 'அடிமைப் பெண்'ணைப் பார்க்க அண்ணா இல்லையே என்பது எனக்குப் பெருத்த ஏமாற்றம்! அண்ணா அவர்கள் அடிக்கடி இந்தப் படத்தைப்பற்றி விசாரித்திருக்கிறார். அந்தப் பெருங்குறையை நிவர்த்திக்கும் பொருட்டுத்தான் அண்ணா சிலை படத்தின் ஆரம்பத்தில் காட்டப்படுகிறது.

"அடிமைப் பெண்" படத்தில் குறைகளிருந்தால் அவை என்னுடையவை. நிறைவுகள் இருந்தால் அவை என்னுடன் தங்கள் சொந்தப் படம்போல் ஒத்துழைத்த மற்ற தொழிலாளர்களுடையவை. என் இலட்சியத்தின் முதற்படி "அடிமைப் பெண்."



# சிறையிலும் சிரிக்கும் நடிகவேள் ராதா!



கிண்டல் நடிப்பால் ஆயிரம் ஆயிரம் இதயங்களைக் கவர்ந்த நடிகவேள் எம். ஆர். ராதா சிறையில் இப்போது என்ன செய்துகொண்டிருக்கிறார்?

ஓய்வே இல்லாமல் எந்நேரமும் 'பிஸி'யாக வ தன் காலத்தை சினிமா 'பீல்ட்'டில் கழித்த ராதாவிற்கு சிறையில் பொழுதுபோவதே கஷ்டமாகத்தான் உள்ளதாம்.

நமது விசேஷ நிருபர் ராதாவைச் சிறையில் சந்தித்து இப்படிப் பலவிதமான விபரங்களைச் சேகரித்துக்கொண்டு வந்துள்ளார்.

சிறையில் ராதா அநேகமாகச் சிந்தித்துக்கொண்டேயிருக்கிறார்! ஆனாலும் அவர் எந்நேரமும் கலவரமில்லாமல் சிரித்துக்கொண்டேயிருக்கிறார்! தன்னைச் சந்திக்க வருபவர்களுடன் நீண்ட நேரம் பேசாவிட்டாலும் பேசும் அந்தச் சில நிமிடநேரங்களில் சிரித்துச் சிரித்துத் தனக்கே உரிய பாணியில் பேசுகிறார்.

வாரத்தில் ஒருநாள் அவர் மகன் வாசு அவரைப் போய்ச் சந்திக்கிறார். மகனுடன் அவர் பேசுவதை விரும்புகிறார். மனைவி கீதாவும் இவரை இடையிடையே வந்து சந்திக்கிறார்.

படவுலகம் சம்பந்தப்பட்ட பிரமுகர்களும் ராதாவை மறக்காமல் அடிக்கடி வந்து சந்தித்துப் போகிறார்களாம்.

"நடக்கிறது நடந்தே தீரும்; அதனை நாம் தவிர்த்துக்கொள்ள முடியாது" என்பதுதான் ராதாவின் சித்தாந்தம்.

### துணைவன்

தண்டாயுதபாணி பிலிம்ஸின் "துணைவன்" படத்திற்கான வெளிப்புறக் காட்சி படப்பிடிப்பு கோவையை அடுத்த மருதமலை முருகன் கோவிலிலும் பழனி முருகன் கோவிலிலும் இப்போது நடக்கிறது.

உங்கள் குமங்கைகளை

மாமி!

பாவையரே!

ஆடற்கலைக்கு அழகூட்டும் கலைச்செல்வி கீதாஞ்சலி சிவாஜிதுரை! வண்ணை ஸ்ரீ வேங்கடேஸ்வர ஆலய நிதிக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரம் ஆயிரம் இதயங்க ஒப்வே இல்லாமல் எந் வாரத்தில் ஒருநாள் அவர் கோ[illegible] யை அடுத்த மரு
ளைக் கவர்ந்த நடிகவேள் நேரமும் 'பிளி'யாக வ மகன் வாக அவரைப் மலை முருகன் கோவிலிலும்
எம். ஆர். ராதா சிறையில் தன் காலத்தை சினிமா'வில் போய்ச் சந்திக்கிறார். மக பழனி முருகன் கோவிலிலும்
இப்போது என்ன செய்து ட்டில் கழித்த ராதாவிற்கு ஊடன் அவர் பேசுவதை இப்போது நடக்கிறது.



ஆடற்கலைக்கு அழகூட்டும் கலைச்செல்வி கீதாஞ்சலி சிவாஜிதுரை! வண்ணை ஸ்ரீ வேங்கடேஸ்வர ஆலய நிதிக்காக யாழ். நகரமண்டபத்தில் கடந்த பதினைந்தாம் திகதி இந்த நடன நிகழ்ச்சி நடைபெற்றது.

# உங்கள் குழந்தைகளை பயப்படுத்தாதீர்



சந்ததி அழிந்துவிடாமல் காப்பாற்றும் பொறுப்புமட்டும் தாய்க்குலத்தைச்சார்ந்திருக்கவில்லை. நல்லவர்களாகக் குழந்தைகளைப்பேணி வளர்க்கும் புனிதமான கடமையும் அவர்களுக்குண்டு.

எனவே ஒவ்வொருதாயும் தனது குழந்தையை வளர்க்கும் போது கவனிக்கவேண்டிய விஷயங்களோ பல.

★ குழந்தைகளைத் தூங்க வைக்கச் சொல்லப்படும் கதைகள் கெட்ட விஷயங்களைப் பற்றியதாக இருக்கக் கூடாது. அது குழந்தையின் அமைதியான தூக்கத்தைக் கெடுத்து கனவுகாணச் செய்யும். அன்பையும் பண்பையும் வளர்க்கும் கதைகளாக அவை இருக்கவேண்டும்.

★ அம்மா ஒரு கதை சொல்லு என்று ஆர்வத்துடன் கேட்கும் குழந்தைகளுக்கு பூதங்களையும் அரக்கர்களையும் பற்றியகற்பனைக் கதைகளைச் சொல்லி அவர்களுடைய மனதைக்குழப்பக் கூடாது. அவர்கள் காணும் பொருள்களைவைத்துத்தான் கதை சொல்ல வேண்டும். இதனுல் குழந்தையினிடத்தில் உள்ள பயம் நீங்கும். அதே நேரத்தில் அறிவும் வளரும்.

★ ஒருதாய்குழந்தையின் பயத்தைக்கேலி செய்வதன் மூலம்போக்கிவிடமுடியாது. அதனுல் பயத்துடன் வெட்கமும் சேர்ந்து கொண்டு விடும். கேலி செய்வது தன்னம்பிக்கையைக் குலைத்துக் கோழைத்தனத்தை ஏற்படுத்திவிடும். குழந்தையை எதற்கெடுத்தாலும் பயப்படச்செய்வதும்தவறு. பயப்படும் குழந்தையைப் பார்த்துச் சிரித்துப் பயத்தைப் போக்கிவிட முயல்வதும் தவறு.

★ குழந்தைகள் தங்கள் மனதில் படுவதையெல்லாம் பெற்றோரிடம் கூறவிரும்புவர். அதைஅனுதாபத்துடன் கேட்டு ஊக்கமளிக்கவேண்டும். சொன்னல் கண்டிப்பார்கள் என்று குழந்தைகள் எண்ணும் விதத்தில் நடந்து கொண்டுவிட்டால் அப்புறம் அவர்கள் எல்லாவற்றையும் மறைக்கத் தொடங்குவார்கள். இது பல தீயவிளைவுகளுக்கு அடிகோலிவிடும்.

★ வீட்டுக்கு வருபவர்களிடம் பெற்றோர் பேசும் போது குழந்தைகள் குறுக்கிடுவது இயல்பு. பெற்றோர் இதனைத் தடுத்தால் குழந்தைக்கு பெரியவர்களைக் கண்டால் அச்சம் ஏற்பட்டுவிடும். தாயின் அன்பு இல்லாததால் பிறரிடம் பழகக் குழந்தை ஆசைப்படும். அதைத் தடுக்கக்கூடாது.

★ குழந்தைக்கு பயமேற்படுவது சுலபம். ஏற்பட்டுவிட்ட பயத்தைப் போக்குவது கடினம். வெட்கத்தின் காரணமாக மறைத்துவைத்துக்கொண்ட பயங்கள் மறைவதேயில்லை. அநாவசியமாகக் குழந்தையைப் பயமுறுத்தக்கூடாது.

★ அன்பும் ஆதரவும் நிறைந்த குடும்பத்தில் சௌக்கியமாக வளரும் குழந்தை பெரியவனுகும் போது, தானே சரியானபடி நடந்துகொள்ளும்.

## மாமி! வாழ விடுங்கள்

வெய்யிலோ அனலாய் எரிந்தது. தாகம் தொண்டையை வரட்டியது. தண்ணீர் குழாய் என்கூடுநோக்கி வருமா? நான் குழாயடிக்குச் சென்றேன். அங்கு ஒரு மாமி தனது மருமகள் தன் மகனேடு அடிக்கடி சினிமா, பீச், கடை என்று ஊர் சுற்றுவதாகவும் தன் மகன் கொண்டுவந்த பொட்டலங்களைத் தனக்குக் காட்டுவதில்லை எனவும் தண்ணீர் எடுக்க வந்திருந்த மற்ற மாதர்களுக்கு மிக ஆத்திரத்தோடு மருமகள் மீது வசைமாரிபொழிந்துகொண்டிருந்தார்.

அந்த மாமியின் அறியாமையை எண்ணிய நான் அவரை நோக்கி, மாமி! உங்கள் மருமகள் தன் பெற்றோர், உறவினரைத் துறந்து உங்கள் குடும்பமேகதி என்று வந்திருக்கிருள். தயவுசெய்து அந்தப் பெண்ணை உங்கள் குழந்தையாக ஏற்றுக்கொள்ளுங்கள். உங்கள் குடும்பத்தில் திருமணத்தின் மூலம் மகளானவள் அல்லவா அவள்! உங்கள் மருமகள் சின்னஞ்சிறுசு. அவள் ஆசைகள் கனவுகள் உங்களுக்குத்தெரியாதன அல்ல. நீங்களும் ஒரு காலத்தில் மாமாவைச்சுற்றியலைந்தவர்கள்தானே. பாதியாவது நினைவில் இருக்குமே. உங்கள் மகனேடு அவள் சினிமாவிற்கு கடற்கரைக்கு, ஊர் பார்க்கப்போகும்போது வயிறெரியாதீர்கள். மகன் வாங்கிவந்த பொட்டலத்திற்குள் பூ இருக்கிறதா, பட்சணம் இருக்கிறதா? எனப் பார்க்கத்துடிக்காதீர்கள்.

ஒவ்வொரு வேலைக்கும் ஓய்வு எடுக்கும்வயதுஉண்டு. உங்களுக்கு அது நெருங்கிவிட்டது மாமி. பேசாமல் சாவியை உங்கள் மருமகளிடம் கொடுத்துவிடுங்கள் குடும்பப்பொறுப்பு அவளிடம் இருக்கட்டும். அவசியமானபோது சில ஆலோசனைகள் சொல்லுங்கள். அவள் கேட்டால் கேட்கிருள் கேட்காவிட்டால் போகிருள். ஆனல் பொறுப்பு மருமகளிடம் இருந்தால் புதுமை பல நடக்கும். இருவரும் பொறுப்பேற்ருல் வீடு இரண்டுபடும். பணிந்து போங்கள்மருமகள்குழைந்து நடப்பாள். விறைத்துப் பார்த்தால்மருமகள்முறைத்துப்பார்ப்பாள். குனிந்து போனல்குதிரையேறுவாளே என்று அஞ்சாதீர்கள். குனிந்துபோனல்தான் உங்களுக்குநிலைதட்டாதுபொறுப்பில்லாவிட்டால் நம்மையாரும் மதிக்கமாட்டார்களே என்றுஎண்ணுதீர்கள். விவேகிகளுக்கு என்றும் மதிப்புண்டு.

கடவுள் உலகைப்படைத்தார். எல்லாம்தாம்படைத்த உலகில் இருக்கிறதா என்று பார்த்தார். அங்கு சண்டையில்லை. உடனே மாமியாரைப் படைத்தார். சண்டை வந்தது என்று பழங்கதை சொல்வார்கள். தயவுசெய்து இந்தக் கதையைப் பொய்யாக்குவீர்களாமாமி? உங்கள் மகன் மருமகள் இவர்கள் வாழ்வுதான் உங்கள் இலட்சியம். வரட்டுமா மாமி என்ற என்னை ஆச்சரியத்தோடும் வெட்கத்தோடும் நிமிர்ந்துபார்த்தார் மாமி. நான் தண்ணீர் பருக குழாய்மேல் இருந்து கீழிறங்கினேன்.

-குடும்பச்சிட்டு.

## இளைத்தவர் பருக்கவும்...

பழங்களில் சிறந்தது வாழைப்பழம். அது வருஷம் முன்னூற்றறுபத்தைந்து நாட்களுக்கும் கிடைக்கும். உடம்பின் வளர்ச்சிக்கு வேண்டிய முக்கியமான சத்துப் பொருட்களெல்லாம் வாழைபழத்தில் இருக்கின்றன; மற்றப் பழங்களில் ஜீவ சத்துக்கள் ஒன்றிரண்டுதான் இருக்கும் வாழைப்பழத்திலோ ஏ, பி, சி, டி, ஈ, ஜீவ சத்துகளும், ஊன் பொருட்களும் பரஸ்பரசும் கால்ஷியமும் உலோகச்சத்துக்களும் இருக்கின்றன.

மேலும் மாமிசத்திலும் இருக்கும் சத்துக்கள் வாழைப்பழத்தில் இருப்பதால் பால் சாப்பிடமுடியாத ஏழைகளுக்கும் மாமிசம் சாப்பிடமுடியாதவர்களுக்கும் இது சிறந்த உணவாகும். இளைத்தவர்களை பருக்கவைக்கும் பருத்தவர்களை இளைக்கவைக்கும்.

## பருத்தவர் இளைக்கவும்...


துடும்பக்

தயாரிப்பு: குணம்


# பாவையரே! பயிர் செய்யுங்கள்

பாவையரே ஓய்வு நேரத்தில் பாங்கியருடன் பல கதைகள் பேசாமல் பயனுள்ளதாக்குங்கள். தையற்கலையிலோ கோழி வளர்ப்பிலோ அல்லது பல காய்கறிகளைப் பயிரிடுவதிலோ நாம் ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தலாம். அந்நேரத்தில் நாம் எதைச் செய்தாலும் அவை பயனுள்ளதாக இருக்கவேண்டும். அதுவே மிக முக்கியம்.

சுந்தரவல்லி சதாசிவம்

பயனற்ற நேரத்தில் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதுபோல் சிறந்தது வேறொன்றுமில்லை. வீட்டின் முன்றலிலே நாம் அழகிய பூந்தோட்டத்தை அமைக்கலாம். பூந்தோட்டத்தினுல் பூவையர் அடையும் பயன் என்ன எனச் சிலர் கருதலாம். திருமண வைபவத்திற்கோ அல்லது வேறு விசேட நாட்களிலோ கடையில் சென்று பூக்களையும் பூமாலையையும் வாங்கி அணியும் நங்கையர், வீட்டிலே நறுமணம் மிக்க நல்ல மலர்கள் இருந்தால் அவைகளை அணியலாம். இதனுல் அதற்குச் செலவிடப்படும் பணம் மீதப்படும். பூந்தோட்டம் இல்லத்தையும் புதுப்பொலிவுடன் விளங்கச் செய்கிறது.

வீட்டிற்குப் பின்புறத்திலோ அல்லது பக்கத்திலோ உள்ள இடத்தில் நாம் நல்ல காய்கறிகளைப் பயிரிடலாம். வெண்டி, கத்தரி, மிளகாய், புடலை, பாகல், பயற்றங்காய், தக்காளி முதலியவற்றைப் பயிரிடலாம். ஓய்வு நேரத்தில் இவைகளை நாட்டி, நீருற்றி பசளையிட்டு, நன்கு பேணி வளர்த்தால் அவை நற்பயனளிக்கும். நாகரீக மங்கையர் நாம் ஏன் காய்கறிகளைப் பயிரிடவேண்டும்; நினைத்தவற்றை நினைத்தவுடனே சந்தையில்வாங்கிவிடலாமே என நினைக்கலாம். சந்தையில் வாங்கும் காய்கறிகள் சில வாடியிருக்கும். அப்படி வாடாமல் இருந்தாலும் வீட்டிற்குக் கொண்டுவந்து ஓரிரு நாட்கள் வைத்தால் வாடிவிடும். குளிரூட்டியில் வைத்தால் அவை அப்படியே வாடாமல் இருக்கும். ஆனல் சாதாரண மக்களிடம் குளிரூட்டி ஏது?

வீட்டிலே காய்கறிகள் பயிரிடப்பட்டால் உணவுக்குத் தேவையானவற்றை உடனுக்குடன் பறித்துச் சமைக்கலாம். மிகுதியானவற்றை விற்று சிறுசேமிப்பும் செய்யலாம். நாம் பயிரிட்ட பயிரினங்கள் காய் கனிகளுடன் பொலிவுற விளங்கும்போது நாம் அடையும் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

வீட்டுத் தோட்டத்தினுல் நாம் மட்டுமன்றி எமது நாடும் பயனடைகிறது. ஒவ்வொரு வீட்டிலும் வீட்டுத் தோட்டம் இருந்தால் உணவுப்பற்ருக் குறையே ஒழிந்துவிடும். இதனுல் நாம் உணவுக்குப் பிறரை நம்பி வாழாது எம்மை நம்பி வாழலாம். அரசாங்கம் கூட இதனை ஆதரிக்கிறது. இவற்றைப்பார்வையிட்டு பரிசில்கள் சில வழங்கியுள்ளது. நங்கையரே நாடும் நாமும் பயன்பெற நற்பயிரை வளர்ப்போம்.


மங்கையர் அங்கங்களுக்கு அதீத அழகைக் கொடுப்பது
நவ நாகரிக அமைப்பு வாய்ந்தது.
உத்தரவாதமுள்ளது
தெய்வா நகை மாளிகையின்
தங்க வைர நகைகள்..
இன்றே விஜயஞ்செய்யுங்கள்
தெய்வா நகை மாளிகை
(முட்டாஸ்கடைச் சந்திக்கு அருகாமை)
173, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம்.



"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ கால்மேஸ்
(Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 330


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிருகஸ்தனுக்கும் பிரமச்சாரிக்கும்...

(2ம் பக்கத்தொடர்ச்சி)

பவ அறிஞர்களும் மனிதப் பிறவியின் மேன்மையைப் பற்றிக் கூறியிருக்கிறார்கள். ஒரு மனிதனுக்கு முதல் தேவை தன்னம்பிக்கை. தன்னம்பிக்கையற்றவன் கோழை, சோம்பேறி. அவனுக்கு வாழ்வே கிடையாது.

தன் பிறப்பையும் வாழ்க்கையையும் இழிவாக நினைப்பவன் எப்படி வாழ்க்கையில் பற்றுக்கொள்ள முடியும்? வாழ்க்கை இன்பங்களை எப்படி அனுபவிக்க முடியும்?

தாழ்வு மனப்பான்மையும் விரக்தியுமே ஒருவனுக்கு வாழ்க்கையைத் துன்பக் கடலாக்குகின்றன. விரக்தி நிலை விஷம் போன்றது. எந்தச் சந்தோஷமான சூழ்நிலையையும் துன்பமயமானதாக்கிவிடும்.

இந்த மந்த நிலையை உதறித்தள்ளிவிட்டுத் துள்ளி எழவேண்டும். உள்ளத்தில் மலர்ச்சியையும் முகத்தில் புன்முறுவலையும் தேக்கிக் கொள்ளவேண்டும். சோம்பலை விட்டொழித்துச் சுறுசுறுப்பை வளர்த்துக்கொள்ளவேண்டும். உற்சாகமான ஒரு மனநிலையை உண்டாக்கிக்கொண்டால் எந்த ஒரு பிரச்னையையும் மகிழ்ச்சியுடன் அணுக முடியும்.

தூசி படிந்த கண்ணாடி மூலம் பார்க்கும்போது காட்சியின் அழகு தெரிவதில்லை. அதுபோலவே தாழ்வு மனப்பான்மை என்னும் தூசு படிந்த மனக் கண்ணாடிமூலம் பார்க்கும் போது இறைவன் நமக்காகப் படைத்திருக்கும் இன்பங்கள் தெரிவதில்லை.

வாழ்க்கையை இன்பமயமாக்கவேண்டுமானால் இந்த அடிப்படை உண்மையை நாம் புரிந்துகொள்ளவேண்டும். உலகம் இன்பமயமானது. வாழ்க்கை இன்பமயமானது. நம்மைச் சுற்றி எங்கும் இன்பங்கள் கொட்டிக் கிடக்கின்றன. இவற்றை நாம் அனுபவிக்கவேண்டும்.

(தொடரும்)

என் வாழ்வில் ஒரு நாள்—(12)

# 'மீனோ மிருகமோ மனிதரோ எல்லாம் எனக்கு உணவுதான்'

சொன்னது: முதலை

எழுதியது: வி. என். பி.

இந்த உலகத்திலே, ஐயா, ஊர்வன, பறப்பன, நடப்பன என்று மூன்று வகை ஜந்துகள் வாழ்கின்றன. ஊர்வன என்ற வகையில் மிகப்பெரியவனும் பொல்லாதவனும் சகல ஜீவன்களாலும் வெறுக்கப்படுபவனும் நான்தான். ஏன், இந்தக் காட்டிலே வாழும் சிங்கம், புலி, கரடி, பாம்பு எல்லாவற்றையும் விட நான்தான் உங்கள் சாதியில் கூடுதலாக பலியெடுப்பவன். என்னைக் கண்டால் எவருக்கும் குலை நடுங்கும். மீனோ மிருகமோ மனிதரோ என்று பார்க்க மாட்டேன் எல்லோரையும் சாப்பிட்டு ஏப்பம்விடுவேன்.

அதோ அந்த குளத்துக் கரையில் சூரியில் படுத்து மரத்துண்டு போல் கிடக்கிறாளே, அவள்தான் என்னுடைய சம்சாரம். சில நாட்களுக்கு முன்புதான் அவள் கர்ப்பவதியானாள். அந்தச் சமயத்தில் இங்கே பெரும் கலவரம் நடந்துவிட்டது. நாலைந்துபேர் இங்கு வந்து என்னோடு போட்டியிட்டார்கள். கடைசியில் ஜெயித்தவன் நான்தான். நான் வாயை திறந்து தூரத்து இடிமுழக்கம் போல ஒரு ஓசையை பிறப்பித்தேனோ இல்லையோ, மற்ற முதலைகள் எல்லாம் பயந்தோடிவிட்டன. ஆமாம், அந்த உண்மை உங்களுக்கு தெரியுமா? ஊர்ந்து திரியும் பிராணிகளில் நான் ஒருவன்தான் சத்தம் போடுவேன் அதாவது நான் போடும் சத்தம் ஒன்றைத்தான் உங்களால் கேட்கமுடியும்.

இன்னும் சில நாட்களில் என்னுடைய சம்சாரம் குளக்கரையிலுள்ள காய்ந்த மணலில் ஓரடி ஆழத்துக்கு தோண்டி அந்தக்குழியில் சுமார் 50 அல்லது 60 முட்டைகளை இட்டு மறுபடியும் மணலாலும் இலைசருகுகளாலும் மூடிவிடுவாள். ஒரு முட்டை மூன்று அங்குல நீளத்தில் கோழிமுட்டை வடிவத்தில் ஒரு தோல் போல மிருதுவாகஇருக்கும்.

முட்டைகளை கீரி, நரி, குரங்கு, மலைப்பாம்பு முதலிய பிராணிகள் களவெடுத்து சாப்பிடுவதும்உண்டு. அவற்றிற்கு காவலாக என் சம்சாரம் சதா நேரமும் குளக்கரையில்காவல்செய்து கொண்டே இருப்பாள். ஏன், உங்கள் வர்க்கத்தினர் கூட சில சமயம் எங்கள் முட்டைகளை களவாடி சாப்பிடுவதுமுண்டு. ஆனால் அவை உங்கள் நாவுக்கு அவ்வளவு ருசியானவையல்ல. அவற்றில் ஒருவித மச்சவெடில் சகிக்க முடியாமலிருக்கும்.

சுமார் மூன்று மாதங்கள் கழித்துசூரியவெப்பத்தினால் முட்டைகள் பொரித்து குட்டிகள் வெளிப்படும். மேலேயுள்ள மண்ணை அகற்றமுடியாமல் அவை 'பீப், பீப்' என்று சத்தமிடும். தாய் அதைக் கேட்டவுடனே ஓடோடிச் சென்று மணலைக் கிளறி குட்டிகளை வெளிப் படுத்துவாள். பத்துஅங்குல நீளமுள்ள எனது குட்டிகள் பிறந்த உடனேயே அகோர மூர்த்திகளாக மாறி அகப்பட்ட பொருள் எதையும் கடித்து எதிர்க்கும். தாய் அவற்றை கூட்டிக்கொண்டு குளத்துக்குபோவாள். அதற்கிடையில் நாரைகளும், பருந்துகளும், கழுகுகளும் குட்டிகளை இருஞ்சிக் கொண்டு போய் விடுவதுமுண்டு. தண்ணீருக்குள் சேர்ந்தவுடனே குட்டிகள் மீன், நண்டு முதலியவற்றையும் பின்னர் வயது வந்ததும் சிறிய மிருகங்களையும் தாங்களாகவே கொன்று தின்னப் பழகிக்கொள்ளும்.

நான் தண்ணீருக்குள் படுத்திருக்கும் போது என்னை இலேசாக அடையாளம் கண்டுகொள்ளமாட்டீர்கள். உடல் முழுவதும் நீருக்குள் மறைந்திருக்கும். மூக்குத் துவாரங்களும் கண்களும்மே நீர்மட்டத்துக்குமேல் தெரியும். குளக்கரையில் தண்ணீர் குடிக்க ஒருமானோ, மரையோ, குரங்கோ எது வந்தாலும் உடனே ஓசைப்படாமல் தண்ணீருக்குள் அமிழ்ந்திவிடுவேன். அப்படி நான் கீழே தாழும் போது நீர்மட்டத்தில் ஒருசிறு அலையும் ஏற்படாது. சுழியோடிச் சென்று மிருகத்தின் கால்களை பற்றிக்கொள்வேன். ஒரே ஒரு கடியில் எலும்புகள் எல்லாம் நொருங்கிவிடும். அப்படியே அதை நீருக்குள் இழுத்துச்சென்றுவிடுவேன். மிருகம் ஏதாவது தொந்தரவு கொடுத்தால் என்னுடைய வாலினால் செம்மையான அடி ஒன்று அதை அடக்கிவிடும். எனது வலிமை முழுவதும் வாயிலும் வாலிலும் தான் தங்கியிருக்கிறது, வாயினால் ஒரு கவ்வு கவ்வினேனேயானால் அது இடுக்கிபோல் பிடித்துக் கொள்ளும். வாலினால் ஓர் அடி கொடுத்தேனேயானால் சில சமயம் படகுகளையும் புரட்டிவிடுவேன்.

எனது பற்கள் கூர்மையும் வலிமையும் உள்ளவையானாலும் இறைச்சியைச் சப்பித்தின்பதற்கு அவை உபயோகப்படுவதில்லை. மாமிசத் துண்டுகளை அப்படியே முழுசாக விழுங்கிவிடுவேன். இதற்காகத்தான் பிடிக்கும் மிருகங்களை நீருக்குள்ளே புதரும் சேறும் நிறைந்த இடங்களில் கொண்டுபோய் புதைத்துவிடுவேன். மாமிசம் நன்றாக நீரில் நனைந்து பழுதுபட்ட பின்பு சாவகாசமாக உண்டு தீர்ப்பேன். எனது பல் இடுக்குகளில் எந்த நேரமும் மாமிசத்துண்டுகள் புகுந்து வேதனை கொடுக்கும். வெளியே வந்து குளக்கரையில் படுத்திருக்கும்போது வாயை அகலத்திறந்து கொண்டிருப்பேன். ஒரு சாதி சிறிய குருவி பறந்துவந்து எனது வாய்க்குள் தைரியமாக நுழைந்து அந்த இறைச்சித்துண்டுகளைப் பொறுக்கி தின்னும். எனக்கு அது மிகவும் ஆனந்தமாய் இருப்பதனால் நான் பேசாமல் படுத்திருப்போன். குருவியை ஒன்றும் செய்யமாட்டேன்.

மீனோ மிருகமோ மனிதரோ யார் அகப்பட்டாலும் பயப்படாமல் பிடித்துச் சாப்பிட்டுவிடுவேன். ஆனால் நாய்களைக்கண்டால் எனக்கு ஓர் அலாதி பிரியம். நாய் மாமிசம் பல்லுக்கு மிகவும் இதமாயிருக்கும். எனது ஜீரணிக்கும் சக்தி மிகவும் ஆச்சரியமானது. என்னை வெட்டிப்பார்த்தீர்களானால் சில சமயம் மீன் தூண்டில்களும் மிருகங்களுக்கு நீங்கள் அடிக்கும் 'லாடன்'களும் இருப்பதைக் காணலாம்.

இப்படியெல்லாம் அசுர பலத்துடன் விளங்கியபோதிலும் கடைசியில் நீங்கள்தான் எங்களுக்கு யமனாகவும் இருக்கிறீர்கள். என[illegible] தோலை உரித்துப்பதப்படுத்தி கைப்பைகளையும், பண[illegible]

## மஹாபலி...

(2ம்பக்கத் தொடர்ச்சி)

மனோபாவத்தோடு, வர்ணிக்கின்றான் முனிவன்;

நின்றகால், மண்ணெலாம்
நிரப்பி அப்புறம்
சென்றுபா விற்றிலை
சிறிது பாரனு;
ஒன்றவானகம் எலாம்
ஒடுக்கி உம்பரை
வென்றகால் மீண்டது
வெளிபெறுமையே.

ஒரு காலைக் கீழே மண்ணில் ஊன்றிக்கொண்டுதான் ஒரு கா[illegible]ல் வானத்தையெல்லாம் அளந்தாராம் மகாவிஷ்ணு. (கம்பன் கவிதையும் இப்படித்தானே) நிலத்திலே ஊன்றிய சிறிய அடி [illegible]ர்ந்து நின்று உலகம் முழுவ[illegible]தையும் அளந்து நிரப்பிவிட்டதாம். அப்படி [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைகள்
எல்லாவற்றையும்

## வரிவிளம்பரம்

SITUATION WANTED

Honest, Hard working well Experienced accounts clerk. Double entry system. and with knowledge of booking, checking and other jobs associated with the cinema seeks immediate employment. 1135, C/o, Eelanadu, Jaffna. 1135

### தேவை

மத்திய மாகாணத்திலுள்ள பட்டினம் ஒன்றின் பிரசித்தமான பிள்ளையார் கோவிலுக்கு 1-7-69-ந்திகதியிலிருந்து பொறுப்பேற்க ஐயர் அல்லது குருக்கள் தேவை. தங்கும் இட வசதி உண்டு. அனுபவம் தகுதிக்கேற்ப சம்பளம் தரப்படும். விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 1126, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1126

நவீனமுறையில் மருந்து வகைகள் தயாரிக்கப் பயிற்சி பெற்று பின் ஸ்தாபனத்தைப்பொறுப்பேற்று நடாத்தக்கூடிய ஆண் அல்லது பெண் தேவை. ரசாயன சாஸ்திரம் கற்றவராயும் 30 வயதிற்குட்பட்டவராயும் இருத்தல் நலம். தொடர்புகொள்ளவும். தபாற்பெட்டி-67, யாழ்ப்பாணம். 1144

லொறி, வான், கார் செலுத்தக்கூடிய தேர்ச்சி பெற்ற, அனுபவம் வாய்ந்த டிறைவர்கள் தேவை. அத்தாட்சிப் பத்திரங்களுடன் நேரில் விண்ணப்பிக்கவும். லொறி, வான்களில் வேலை செய்யக்கூடிய திறமை வாய்ந்த கிளீனர்கள்தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். ஆ. ச. சங்கரப்பிள்ளை அன் பிறதர், 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1146

மெக்கானிக்கல்அப்பிறென்ரிஸ். எமது வேலைத்தலத்தில் சிலின்டர், றிபோறிங், றீசிலீவிங், கிறங்சாவ்ற், றிகிறைன்டிங், கெட்பேசிங், மற்றும் பல யந்திர சீர்படுத்தும் வேலைகள் பழக 16—20 வயதுக்குள் குறைந்தது யெ. எஸ். சி. தராதரத்துள் ஆங்கிலம், கணக்கு பாடங்களில் சித்தியடைந்தவர்களாய் இருத்தல்வேண்டும். ராமகிருஷ்ணாஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1147

### விற்பனைக்கு

முற்றிலும் புதுப்பிக்கப்

# 'ஈழநாடு' பொது அறிவுப் போட்டி-5

சென்றவாரத்துக்கேள்விகளுக்குசரியானவிடைகள் பின்வருமாறு: 1. அம்மன், 2. 24 நிமிடங்கள், 3. ஓர் இலக்கிய நூல், 4. டட்லி சேனநாயகா, 5. ஹெயில்செலாஸி, 6. நீலத் திமிங்கிலம் 7. கியூபா, 8. அவுஸ்திரியா, 9. 3 1/2 மணி, 10. இரண்டுமுட்டைகள்.

## பரிசு பெறுபவர்

நேயர்கள் பலரைப் பத்தாவது கேள்வி ஏமாற்றி விட்டபோதிலும் அதற்குச் சரியான விடை எழுதியவர்கள் மற்றக் கேள்விகளில் கோட்டை விட்டபடியினால், முதலாவது பரிசு எவருக்கும் அளிக்கப்படவில்லை. ஒரு பிழையுடன் வந்து முதலாவதாகத் திறக்கப்பட்ட விடை எழுதியவருக்கு இரண்டாம் பரிசுப்பணமாக ஐந்துரூபா அனுப்பப்படும்.

இதை எழுதியவர்:- இ. யோகேஸ்வரன், 'சிவபவனம்' துன்னாலை வடக்கு, கரவெட்டி.

## பாராட்டுகள்

பின்வரும் நேயர்களும் ஒரு பிழையுடன் விடை அனுப்பி இருக்கிறார்கள்:- நா. கிருஷ்ணவேல், புற்றளை, புலோலி தெற்கு. செ. சற்குணதேவி, மூத்தவிநாயகர் கோவில் ஒழுங்கை, ஆனைக் கோட்டை. வே. நவரத்தினம், துன்னாலை தெற்கு, கரவெட்டி. வி. எஸ். தனபாலசிங்கம், உடுப்பிட்டி ராய் கிழ்க்கு. செ. திருநாவுக்கரசு, 1-ம்வட்டாரம், அல்லைப்பிட்டி.

## இந்த வாரக் கேள்விகள்

1. சமீபத்தில் காலஞ்சென்ற தமிழக அமைச்சரின் பெயரென்ன? 2. யாழ்ப்பாண வைபவ மாலையை இயற்றியவர் யார்? 3. கிறிஸ்துநாதர் பிறந்த இடம் எது? 4. ஆஸ்திரேலியாவின் தலைநகரம் எது? 5. இலங்கைப் பிரதம நீதிபதியின் பெயரென்ன? 6. தென்னை, பனை, வாழை, பலா, கமுகு — இந்த வரிசையில் சேராதது எது? 7. டெலிபோனைக் கண்டு பிடித்தவர் யார்?

8. ஜவஹர்லால் நேரு பரிசு இம்முறை யாருக்கு வழங்கப்பட்டது? 9. சிங்கப்பூரை ஜப்பானியர் கைப்பற்றியபோது அதற்கு இட்ட பெயர் என்ன? 10. ஈராக்கில் இலங்கை தூதுவர் யார்?

# விகட கவிதைப் போட்டி-(5)

போலிச் சாமியார் மிகவும் திண்டாடிப்போய் விட்டார் நேயர்களிடம். அருமையான பல விகட கவிதைகள் வந்தன. அவற்றை எல்லாம் இங்கு பிரசுரிக்க இடம் போதாது. அடுத்த போயா மலரில் சிலவற்றை வெளிப்படுத்தலாம் என்று தீர்மானித்திருக்கிறோம்.


## பரிசு பெறும் கவிதை

கள்ளோடு கஞ்சாவை காமத்தை நஞ்சென்று
சொல்வார்
காவியுடை தன்னுக்குள் கதிமோட்சம் உண்
டென்று கொள்வார்
காப்படி அரிசிக்கு கதிர்காமக் கந்தனை
இழுப்பார்,
நாட்படி தப்பாமல் கள்ளாக மாற்றிடச்
செல்வார்
நல்ல சாமி யிவரா சாமி யிங்கே யேமாற்று

# எல்லாவற்றையும் ஒழித்து விளைச்சலைப் பெருக்க

புதிய சீர்ப்படுத்திய

# ஸ்டாம் எப்-34




புதிய, சீர்ப்படுத்திய "ஸ்டாம்" எப் - 34, உங்கள் விளைச்சலைச் சூறையாடும் புற்கள், முட்சோரைப் புற்கள், அகன்ற இலைக்களைகள் அனைத்தையும் தேர்ந்து அழித்து ஒழிப்பதின் மூலம் அமோக நெல் வேளாண்மைக்கு உத்தரவாதமளிக்கிறது.

புதிய, சீர்ப்படுத்திய "ஸ்டாம்" எப் - 34 இல் 36% டி, பி. ஏ. இடம் பெற்றுள்ளது. இக் களைப்புற்கொல்லி தெளிகருவியின் பீச்சு முனைகளில் கட்டி பட்டு அடைத்துக் கொள்வதில்லை. இதனை அடைப்பத் தெளிகருவி மூலமோ மிஸ்ட் புளோவர் மூலமோ தெளிக்கலாம். முன்னைப் பொழுதைப் பார்க்கிலும் சிறப்பான வகையில் இது களைகளைக் கட்டுப்படுத்துகிறது.

அதிக நெல் பயிரிட்டுக் கூடுதல் இலாபம் சம்பாதிக்க உபயோகியுங்கள், "ஸ்டாம்" எப் - 34.

ஷெல் ரசாயனப் பொருட்கள் SHELL

ரசாயனப்பொருளை நினையுங்கள், ஷெல்லை நினையுங்கள்


ஒரு காலால் வானத்தை யெல்லாம் அளந்தாராம் மகாவிஷ்ணு. (கம்பன் கவிதையும் இப்படித்தானே) நிலத்திலே ஊன்றிய சிறிய அடி வளர்ந்து நில உலகம் முழுவதையும் அளந்து நிரப்பிவிட்டதாம். அப்படி அளந்ததும் அப்பால் போகவில்லையாம்; "ஓஹோ! இந்தப் பூமி இவ்வளவு சிறியது!" என்றுதான் மேலும் பரவிச் செல்லாமல் அருளோடு அடங்கி நின்றுவிட்டதாம். மற்றத் திருவடியோ மேலே மேலே, மேலே மேலே போய்ப்போய் வானகமெல்லாம் ஒருசேரத் தன்னுள் ஒடுங்கச் செய்துவிட்டதாம். மேல் உலகங்களெல்லாம் கடந்து சென்ற அந்தத் திருவடியும் அப்பால் செல்லக் கூடியதுதான்; அப்பாலுக்கு அப்பாலும் மேலோங்கிச் செல்லக்கூடியதுதான். வானவெளி பெருமல்தான் திரும்பிவிட்டதாம். கடவுள் எல்லாவற்றையும் கடந்தவனாக இருந்தும், எங்குமாகி எல்லாமாகி வியாபித்து "இருளா"கிய அசுர சக்திகளை ஒடுக்கி அருள் செய்கிறான் என்பது குறிப்பு.

ஈரடிக்கும் அளந்து கொள்ள இடம்தரமுடியவில்லையாம் மஹாபலிச் சக்கரவர்த்தியினாலே. இந்த நிலையில் "மூவடி தருகிறேன் என்றாயே! மற்றை ஓரடிக்கு இடம் எங்கே? காட்டு!" என்று அந்தப் பொல்லாத யாசகன் கேட்க, யார்தான் திகைத்துப்போகமாட்டார். மஹாபலி வள்ளலல்லவா? பக்தனல்லவா? "இதோ தந்தேன். அடியேன் முடியிருக்கிறதே!" என்று ஞானம் ஒளிர, அகம் ஒடுங்கி முடி சாய்ந்தானும். அப்படியே அந்த அன்பனுடைய முடி மூன்றாவது அடிக்கு இடமாயிற்று. இந்தக் கேள்வியுடன் கதை முடிந்துவிட்டதென்றுதானே எண்ணுகிறீர்கள்? அதுதான் இல்லை. அசுரமகா ராஜ்யத்தை ஒருங்கே விண்ணிலும் மண்ணிலும் ஸ்தாபித்திருந்த மஹாபலியின் கதை முடிந்துவிட்டது. 'வாமனன் மண் இது' என்று தன்னுடைய ராஜ்யத்தை மண்ணிலும் ஸ்தாபிக்க வந்த மாயக்குள்ளனுடைய கதை இன்னும் முடிவு பெறவில்லை. "இருளின் சக்தி"களான அசுரசக்திகளிடமிருந்து மீட்டுக் கொண்ட மூவுலகாட்சியையும் தேவசக்திகளின் தலைவனாகிய தேவேந்திரனுக்கு அளித்து விடுகிறானும் பகவான்.

இந்திரனுக்கு உரிமை கிடைக்கிறது. மூன்று லோகங்களுக்கும் சுய ராஜ்ய ஒளி கிடைத்து விடுகிறது! என்னும் முனிவன் கதையை முடிக்கவில்லை.

(தொடரும்)

லாம்.

இப்படியெல்லாம் அசுர பலத்துடன் விளங்கியபோதிலும் கடைசியில் நீங்கள்தான் எங்களுக்கு யமனாகவும் இருக்கிறீர்கள். எனது தோலைஉரித்துப்பதப்படுத்தி கைப்பைகளையும், பண 'பேர்சு'களையும், செருப்புகளையும் செய்கிறீர்களாம். நீங்கள் எம்மைக்கொல்லாவிட்டால் நாங்கள் சாதாரணமாக நூறுவருடங்களுக்கும் வசிப்போம்.

கடைசியாகஒருவார்த்தை எச்சுச்சக்கமாக என்னிடம் அகப்பட்டுவிடாதீர்கள். பிறகுவருத்தப்பட நேரிடும். உங்களைப்பார்த்துநான் முதலைக் கண்ணீர் வடிக்கமாட்டேன்.



## சைவச்செம்மல் நல்லூர் 'அரியம்'

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த உடும்பிராயில் கணபதிப்பிள்ளை, தங்கமுத்து தம்பதிகளின் புதல்வனாக அவதரித்த அரியரத்தினத்தை எவராவது தெரியாதவர்கள் இருக்கலாம். ஆனால்பலாங்கொடை ஓவஸியர் 'அரியம்' என்றால் தெரியாதவர்களே இருக்கமாட்டார்கள்.

வேலைத்திறன், பொது நலத்தொண்டு, தெய்வ பக்தி, விருந்தோம்பல், நன்றி மறவாமை ஆகியவற்றால் கூடியவர் மனதில் என்றும் நீங்காத நினைவு பெற்ற திரு. அரியரத்தினம் நல்லூரிலுள்ள தனது இல்லத்தில் சிவபதமடைந்து ஒரு மாதமாகின்றது.

பலாங்கொடை கோப்பித் தோட்டத்தில் முதலில் உத்தியோகம்பார்த்த இவர்பின்னர் பலாங்கொடையில் ஓவஸிராகவிருந்து பெல்மதுலப் பட்டின ஓவஸியராகப் பதவி உயர்வு பெற்று தனது 55 வயதில் பதவியிலிருந்தும் ஒய்வு பெற்றார். சிங்கள அன்பர்களால் 'அரியம் மகத்மாத்யா' என அழைக்கப்பட்டு வந்த இவர் மூன்று பாஷைகளையும் சரளமாகப் பேசுவார். சாதி, மத, இன மொழிப் பாகுபாடில்லாமல் சகலரையும் சகோதரர்கள் என்ற சமநோக்குடன் கணிப்பவர்.

தெரிந்தவர், தெரியாதவர்கள் எவர் வந்தாலும் அவர்களை விருந்தோம்புவதில் இவர் முன்நிற்காத நாளே கிடையாது. இவர் வீட்டில் ஏதாவது ஒரு விசேஷம் என்றால் அது புதியவர்களும் பழையவர்களும் சந்திக்கும் ஓர் இடமாகவே இருக்கும்.

55 வயதில் ஒய்வு எடுக்க விண்ணப்பம் அனுப்ப அரசாங்கம் அவரை மேலும் வேலை செய்யுமாறு வேண்டியதே அவரது வேலைத் திறனுக்கு ஓர் எடுத்துக் காட்டாகும். எந்தப் பொது விடயமானல் என்ன நிதி உதவி, உடல்உதவி, சகலதையும் செய்து, இலைமறைகாயாகவே அங்கு இருப்பார்.

நல்லூரிலுள்ள செல்லம்மா என்ற நல்லாளைத் திருமணம் செய்து, அதன் பேறாக மூன்று புத்திரிகளையும் இரு புதல்வர்களையும் பெற்றெடுத்தார். தெய்வத்தின்மீதுள்ள அசையா நம்பிக்கையை எடுத்துக்காட்ட தனது மூத்த மகனை கணக்காளருக்கு சிவம் என்றும் (சிவரத்தினம்) இளையமகனை டாக்டருக்கு சத்தி என்றும் (சத்தியமூர்த்தி) பெயரிட்டார்.

(6-ம் பக்கம் பார்க்க)


வர்களாய் இருத்தல்வேண்டும். ராமகிருஷ்ணஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1147

### விற்பனைக்கு

முற்றிலும் புதுப்பிக்கப்பட்ட 1 ஸ்ரீ B. S. A. 2.5 மோட்டார் சயிக்கிள்விற்பனைக்குண்டு. ரூ. 2100/- பசுபதி, 529, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 1127

ஆசிரிய கலாசாலை (விசேட) பயிற்சிக்கான பிரவேச விண்ணப்பப் படிவத்திற்கு 5 பத்துச் சத முத்திரையுடன் விண்ணப்பிக்கவும். அதிபர், வர்த்தக கல்வி நிலையம், நீர்வேலி. 1141

பலாலி கடற் தொழிலாளர் குடியேற்றத் திட்டத்திற்குக் கிழக்குப் பக்கமாக 24 பரப்பு தென்னந்தோட்டம். ச. பாலசுப்பிரமணியம், வேம்படி ஒழுங்கை, வல்வெட்டித்துறை. 1102

வண்ணார்பண்ணையில் சகல வசதிகளோடு கூடிய கல்வீட்டுடன் 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: மு. மாணிக்கம், 19/3, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம். 1124


கள்ளோடு கஞ்சாவை காமத்தை நஞ்சென்று சொல்வார்
காவியுடை தன்னுக்குள் கதிமோட்சம் உண்டென்று கொள்வார்
காப்படி அரிசிக்கு கதிர்காமக் கந்தனை இழுப்பார்,
நாட்படி தப்பாமல் கள்ளாக மாற்றிடச் செல்வார்
நல்ல சாமி யிவரா சாமி யிங்கே யேமாற்றுகின்றரே.

இதை எழுதியவர்: இ. விநாயகலிங்கம், கோர்ட் ரோட், மல்லாகம்.

## சிறந்த பாராட்டுக்குரியது

படிப்பதுவும் தேவாரம், படுப்பதுவும் பெண்கள் மனை
குடிப்பதுவும் கொடுங்கஞ்சா, கூடுவதும் கள்வரொடு
உடுப்பதுவும் காவியுடை, உருத்திராட்சப் பூனையிது
இடிப்பதுவும் சிவன்கோவில், என்ன நல்ல சாமியடா!

இதை எழுதியவர்:- சி. சௌந்தரராஜன், தும்பளை சிவப்பிரகாச வித்தியாசாலை, பருத்தித்துறை.

## இன்றைய போட்டி

அடுத்த ஐந்தாவது போட்டிக்கு கசிப்பு முதலாளி மீது உங்கள் கவிதைத் திறனைக் காட்டுங்கள் பார்க்கலாம்.

### நிபந்தனைகள்

ஒவ்வொரு போட்டிக்குரிய விடையும் அதற்குரிய கூப்பனுடன் இணைத்து அனுப்பப்படவேண்டும். விடைகள் 27-5-69க்கு முன் பொது அறிவுப் போட்டி (5), 'ஈழநாடு', த. பெ. இலக்கம் 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு வந்து சேரவேண்டும். ஒருவர் எத்தனை விடைகளையும் ஒரே உறையில் போட்டு அனுப்பலாம். ஆனல் ஒவ்வொன்றுடனும் கூப்பன் இருக்கவேண்டும். போட்டிக்குழுவின் தீர்ப்பே முடிவானது.

கூப்பன்

**'ஈழநாடு' விகடகவிதைப் போட்டி-(5)**

பெயர்.................................................

விலாசம்.................................................

.................................................

திகதி.................................

கூப்பன்

**'ஈழநாடு' பொது அறிவுப்போட்டி-(5)**

பெயர்.................................................

விலாசம்.................................................

.................................................

திகதி.................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார சாரம் — அரசியல் நிருபர்

# அரசியல் புயல் ஓய்ந்தது படிப்பினைகள் பல உள

"வங்காளக் கடலில் புயல் உருவாகி வடக்கு நோக்கி வந்துகொண்டிருக்கிறது" என்று காலநிலை அவதான நிலையம் (கொழும்பு அவதான நிலையம் சொல்வது பொதுவாக வேசரிவருவதில்லை) சில சமயம் எச்சரிக்கைவிடுவதுண்டு. இந்த அறிக்கையைத் தொடர்ந்து மீனவர் கடலுக்குச் செல்லாமல் தங்கள் உயிரைப் பாதுகாத்துக் கொள்வர். மற்றவர்களும் இயன்றவரை தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கு எப்படியோ முயற்சி செய்வர்.

இந்த எச்சரிக்கை எதுவுமில்லாமல். (மின்னுமல் முழங்காமல் இடிவிழுவது, மழைபெய்வதுபோல) அரசியல் புயல்வீசுவது நமது நாட்டில் சாதாரணமான சம்பவம். இந்த அரசியல் புயல் எப்படி, எங்கிருந்து உருவாகிறதென்பதை அறிந்துகொள்வதுகூடக் கடினம்.

அரசியல்வாதிகள் அவசரப்பட்டு ஒன்றைச் சொல்ல அதைப் பத்திரிகைகள் ஒவ்வொன்றும் தமக்கேற்ற முறையில் பிரசுரிக்க, அதை வைத்து வெவ்வேறு கட்சிகளையும்கொண்ட அரசியல்வாதிகள் தத்தமக்கு ஏற்ற முறையில் வியாக்கியானம் செய்ய, எங்கேயிருந்து, எப்படி ஆரம்பமானதென்பதே தெரியாமல், அற்பவிஷயமும் பெரியபூதாகாரமாக உருவெடுத்துபெரும்அரசியல் புயலை உருவாக்கிவிடுகிறது.

வடபகுதியில் பௌத்த காங்கிரஸினுல் சிறுபான்மைத்தமிழருக்கென அமைக்கப்பட்ட ஐந்து பாடசாலைகளில் அச்சுவேலி, கரவெட்டி அல்வாய் ஆகிய இடங்களிலுள்ள மூன்று பாடசாலைகளையும் அரசாங்கம் எடுத்துக்கொள்ளத் தீர்மானித்திருப்பதாகவும், ஜூன் மாதம் முதல் திகதி கல்விஇலாகா இவற்றைப் பொறுப்பேற்குமென்றும் செய்தி வெளியானது.

இதற்கு சில இடங்களிலிருந்து ஆட்சேபம் கிளம்பியது. பத்திரிகைகளுக்கு அறிக்கைகளாகவும் கல்வி அமைச்சருக்கும் பிரதம மந்திரிக்கும் தந்திகளாகவும் ஆட்சேபனைகள் பறந்தன

1961-ம் ஆண்டின் பாடசாலைசுவீகரிப்புச்சட்டத்தின்படி இந்த மூன்று பாடசாலைகளும் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட பாடசாலைகள் எனவும், இவற்றை எடுப்பதன்மூலம் கல்வி அமைச்சரே சட்டவிரோதமான செயலைச் செய்கிறரென்றும் ஆட்சேபத்துக்குக் காரணம் காட்டப்பட்டது.

இந்தப் பாடசாலைகளை அரசாங்கம் எடுப்பதானுல் நாங்கள் சும்மா இருக்க மாட்டோமென்றும் எப்படியும் இதைத்தடுப்பதற்குப் போராடுவோமென்றும் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த சிலரும் வாலிபர்களும் தெரிவித்தனர். இந்த மூன்று பாடசாலைகளில்இரண்டு தமிழரசுக்கட்சி ஆட்சி மன்றப் பிரதிநிதிகளின் தொகுதிக்குள் இருக்கின்றன.

போராட்டம் என்றதும் 'சத்தியாக்கிரகம்' என்று எப்படிவயா ஒரு பத்திரிகை செய்தியை வெளியிட்டது. ஆங்கிலப் பத்திரிகைகளும் இந்தச்செய்தியைஒவ்வொரு விதமாக முக்கியத்துவம் கொடுத்து வெளியிடத் தொடங்கின. பௌத்த பாடசாலைகளுக்கு வடக்கில் எதிர்ப்பு என்றும், பௌத்த பாடசாலைகளுக்கு சமஷ்டிக் கட்சியினர் கடும் எதிர்ப்பு என்றும், பௌத்த பாடசாலைகளை தமிழ்க்காங்கிரசும் எதிர்க்கிறது என்றும் ஆங்கிலத்தினசரிகளே கொட்டை எழுத்துக்களில்செய்தி வெளியிட்டனவென்றுல் சிங்களப் பத்திரிகைகள்எப்படியிதைப் பெரிதுபடுத்தியிருக்குமென்று சொல்லவேண்டியதில்லை.

குறிப்பிட்ட பாடசாலைகளை கல்வி அமைச்சு எடுத்துக்கொள்வதற்குச் செய்த முடிவு பாடசாலை சுவீகப்புச் சட்டத்துக்கு மாறுனதாக இருந்தாலும், தனிப்பட்ட ஸ்தாபனங்களால் 1961-ம் ஆண்டுக்குப் பின்னர் தொடங்கப்பட்ட சில பாடசாலைகளை அரசாங்கம் கையேற்க மறுத்து அவை மூடப்படவேண்டியேற்பட்டது உண்மையாக இருந்தாலும் மருதங்கேணி விநாயக வித்தியாசாலை போன்ற பாடசாலைகளை அரசாங்கம் இன்னமும் எடுத்துக் கொள்ள முன்வராதபோதிலும், தோட்டப் பாடசாலைகளை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளாமலிருப்பினும், வடபகுதியிலுள்ள ஹரிஜனர்களின் நல்வாழ்விலும் முன்னேற்றத்திலும் கல்வி அமைச்சருக்கும் அரசாங்கத்துக்கும் மட்டுமல்ல பௌத்த காங்கிரஸ். பௌத்தமதத் தலைவர்கள், எதிர்க்கட்சித்தலைவர்கள் எல்லோருக்கும் அதிக அக்கறையும் ஆர்வமும் ஏற்பட்டிருக்கும் இச்சமயத்தில், உணர்ச்சியை வெகுசுலபமாகத் தூண்டிவிடக்கூடிய மதம் சம்பந்தப்படுத்தப்பட்டுள்ள ஒரு விஷயத்தில் எதிர்ப்புத்தெரிவிப்பவர்கள், ஆத்திரம் அவசரமில்லாமல் சற்று நிதானமாகச் சிந்திக்கவேண்டும்.

இதே சமயம் மூன்று பௌத்த பாடசாலைகளையும் பொறுப்பேற்க ஒழுங்குகள் செய்யப்படுவதாக தகவல் வெளியிட்ட கல்வியமைச்சு அதிகாரி, இந்தப்பாடசாலைகளில் சிங்களம் தான் போதனுமொழியாகவும் இருக்கும் என்று 'கூடுதலாக' கொடுத்த தகவல் பின்னர் இந்த மூன்று பாடசாலைகளையும் 'சிங்கள பௌத்த' பாடசாலைகளாக்கி, கல்வி அமைச்சரும் 'சிங்களமே போதனுமொழி' என்று பிடிவாதம் பிடிப்பதற்கு வழிவகுத்திருக்கிறது.

எப்படியோ சிங்களம் போதனுமொழி என்ற சர்ச்சை கிளம்பியதால் அரசியல் புயல் இன, மத சூருவளியாக மாருமல் தடுத்துவிட்டது.

பாடசாலைப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குச் சிங்களம் மூலம் கல்விப் போதனையளிக்க வேண்டுமென்று கோரினுல் அவர்கள் விருப்பப்படி (தனித்தனியாகப் பெற்றோர்ஒவ்வொருவரும் எழுத்தில் கொடுக்க வேண்டும்) சிங்களம் மூலம் கல்வி போதிக்கப்படுமென்றும் இதுதான் இப்போதுள்ள கல்விச்சட்டம் என்று கல்வி இலாகா விளக்கம் தெரிவித்திருக்கிறது.

அதாவது இந்த மூன்று பௌத்த பாடசாலைகளையும் ஜூன் மாதம் முதல் திகதி கல்வி இலாகா அதிகாரிகள் பொறுப்பேற்கும்போது இப்போதுள்ளதுபோல தமிழ் மொழிமூலம் கல்வி போதிக்கும் பாடசாலைகளாகவே பொறுப்பேற்கப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்திருக்கிறது.

எப்படியோ நிலைமை மோசமாகாமல் இருதரப்பினரும் சமாளித்துக்கொண்டுள்ளனர். பாராட்டவேண்டிய விஷயம். பிரதமருக்கு இதில் பங்கில்லாமலில்லை. சமாளித்துவிட்டார்.

இன, மத பூசல்களைக் கிளப்பிவிட்டு இலாபம் பெறுவதற்கு பலரும் காத்துக்கொண்டிருக்கின்றனர்.

இந்தப் பாடசாலைகள் விவகாரத்திலிருந்து தமிழ் மக்கள் படித்துக்கொள்ளவேண்டிய படிப்பினைகள் பல உள. அவற்றில் சில:—

1. சாதிப்பாகுபாடு இருக்கும்வரை அதைப் பயன்படுத்தி தமக்கு ஆதாயம் தேடிக் கொள்வதற்கு எவரும் தலையிடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. சாதிப் பாகுபாடுகளைக் களைந்து நன்மைபெறலாம் என்ற நோக்கத்துடன் கிறிஸ்தவமதத்தில் சேர்ந்தவர்கள், என்ன நன்மையைக் கண்டார்கள், பௌத்த மதத்தை இந்தியாவில் தழுவிய டாக்டர் அம்பேத்காரும் மற்றவர்களும் கண்ட நன்மை என்ன, இங்கு பௌத்தத்தைத் தழுவுபவர்கள் என்ன இலாபத்தைக் காணப்போகிறுர்கள் என்று கேட்பதில் அர்த்தமில்லை.

கல்வி வெள்ளை அறிக்கையை கல்வி அமைச்சர் சமர்ப்பித்தபோது பெற்றோர் விரும்பியபடியே போதனு மொழி இருக்க வேண்டுமென்ற அம்சத்தை தமிழ்க்காங்கிரசும் தமிழ் அரசுக் கட்சியினரும் வன்மையாகக் எதிர்த்தனர். இதற்கு வீட்டுமொழி என்ற சமாதானத்தை பிரதமர் தெரிவித்தபோதிலும்வெள்ளையறிக்கை இன்னும் மசோதாவாக வரவில்லை. தாய்மொழிக்கல்வி சம்பந்தமாக ஒரே குரலில் நின்ற தமிழரசாரும் காங்கிரசாரும் பௌத்த பாடசாலைகள் சம்பந்தப்பட்ட விஷயத்தில் அவைகளை ஏற்றுக்கொள்வது சட்டவிரோதமானதென்பதையும், போதனுமொழியில்மாற்றஞ் செய்வதற்கு உரிமையில்லையென்பதையும் தனித்தனியாகத்தான் பிரதமரைச்சந்தித்துக் கூறியிருக்கின்றனர்.

ஒரே கருத்தை ஒன்றுகவே சென்று சொல்லியிருந்தால் அதற்கு இன்னும் காத்திரம் அதிகரித்திருக்குமல்லவா? சகல பாடசாலைகளையும் அரசாங்கம் எடுத்து அதன் கட்டுப்பாட்டின்கீழ்தான் அவை இயங்குகின்றன. இந்தப் பாடசாலைகளில் ஹரிஜனப் பிள்ளைகளை அனுமதிக்கமுடியாதென மறுக்கமுடியாது; அவர்களுக்கெதிராகப் பாரபட்சம் காட்டவும்முடியாது; சில குறிப்பிட்ட பிள்ளைகள் பௌத்த மதத்தைக் கற்கவிரும்பினுல் அதைத் தடுக்கவும் முடியாது.

சாதிப்பாகுபாடு நீங்க வேண்டுமானுல் தனிப்பாடசாலை, தனித்தொகுதி, தனிச் சங்கம் என்பவை அவசியம் தானு?

மதப் பூசல்களை கிளப்ப சிலர் தயாராக இருக்கிறுர்கள். இனக்கலவரத்தை ஒரு தடவை அனுபவபூர்வமாகக் கண்டிருந்தும் மீண்டும் மலையகப்பகுதிகளில் இதற்கான ஆரம்ப அறிகுறிகள் தோன்றியுள்ளன. அரசாங்கம் மட்டுமல்ல இந்த நாட்டின் அமைதியை விரும்பும் அனைவரும் முயற்சிசெய்ய வேண்டும்.

## சைவச்செம்மல் . . .

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சைவச் செம்மலான இவர் ஓர் உள்ளத்துறவி. பலாங்கொடை மாரியம்மன் கோவில் இத்துணை சிறப்பாக இருக்க முன்னின்று உழைத்தவர் அரியம் ஐயா தான். தினசரி அதிகாலையில் மலருடன் நல்லூர்க் கந்தனை வணங்கச் செல்வது இவரது ஒரு கடமையாகும். இறுதிக் காலத்திலும்கூட 'முருகா! முருகா!' என்றே அழைத்துக்கொண்டு இறைவனடி சேர்ந்த இவரது அந்தியேஷ்டி நாளை மறுதினம் நடைபெறவிருக்கின்றது.

—திரு—

'ஈழநாடு' பத்தாண்டு நிறைவு விழா

## கண்டக்டருக்கு அடித்த வழக்கில் எதிரி குற்றவாளி

வல்வெட்டித்துறை. புதன் 'பஸ் மூத்தநயினுர் கோவிலடி பஸ் தரிப்பு நிலையத்தில் வந்து நின்றதும் பஸ்ஸுக்குள் இருந்தவர்களை இறக்குவதற்காக நான் கீழே இறங்கி ஒருபக்கத்தில் நின்றேன். அப்போது சைக்கிளில் வந்த எதிரி சைக்கிளை போட்டுவிட்டு என்னை தள்ளிவிட்டு கன்னத்தில் ஒரு தரம் அடித்தார். அப்போ பஸ்சை செலுத்தி வந்த சாரதி இறங்கி வந்து ஏன் அவருக்கு அடித்தீர் எனக் கேட்டார். சாரதிக்கும் எதிரி அடிக்கப்போனுர்'.

என பருத்தித்துறை பஸ் டிப்போவைச் சேர்ந்த பஸ் கண்டக்டரான ஈ முருகேசு என்பவர் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு கே. விக்னராசா முன்னிலையில் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினுர்.

இவ்வழக்கில் கரணவாயைச்சேர்ந்த சி. சின்னத்தம்பி என்பவர் கடந்த பங்குனி மாதம் 23-ந் திகதி பருத்தித்துறை பஸ் டிப்போவைச் சேர்ந்த கண்டக்டரான ஈ. முருகேசுவை தாக்கியதாக பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்டது.

முருகேசுதொடர்ந்துசாட்சியமளிக்கையில் கூறியதாவது:- சம்பவ தினத்தன்று நான் பருத்தித்துறை யாழ்ப்பாணம் பஸ்ஸில் கடமையாற்றினேன். அன்று காலை யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்கு பஸ் 8-40 மணிக்குபுறப்பட்டது. புருப்பொறுக்கி பஸ்தரிப்பு நிலையத்தில் பஸ் நின்றது. பஸ்ஸிலிருந்து இருவர் இறங்கினர். பிறகு பஸ் புறப்பட்டது. பிறகு மூத்தநயினுர் கோவிலடி பஸ் தரிப்பு நிலையத்தில் வந்து நின்றது. அப்போது எதிரி சைக்கிளில் வந்து சைக்கிளைப் போட்டுவிட்டு நிலத்தில் இறங்கி நின்ற என்னைத் தள்ளிவிட்டு கன்னத்தில் ஒருதரம் அடித்தார். என்னிடமிருந்த சில்லறைப்பணம் ரூ. 5. 15 ச. காணுமல் போய்விட்டது. சாரதியும் அங்கு நின்ற ஆட்களும் எதிரியின் பெயரைச் சொன்னுர்கள் சாரதியும் எதிரியின் ஊரைச் சேர்ந்தவர்தான். பொலிசுக்கு முறைப்பாடு கொடுத்தேன்.

சாரதி மு. செல்லத்துரை சார்ஜண்ட் நவரத்தினம். பொலிஸ் கான்ஸ்டபிள் எஸ். ரணசிங்கா, சி. சின்னத்தம்பி, சி. தவமணிஆகியோர் சாட்சியமளித்த பின் மாஜிஸ்திரேட் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு தீர்ப்புக் கூறுவதை இம்மாதம் 28-ந் திகதி ஒத்திவைத்தார்.

வழக்காளிசார்பில் பொலிசாருக்கு உதவியாக புறக்டர் திரு. வி. செல்லத்தம்பி ஆஜரானுர்.

## இன்றுபோட்டி

அளவெட்டி, வெள்ளி

வலி-வடக்கு காங்கேசன் துறைப் பகுதி விளையாட்டுச் சங்கம் நடத்தும் 68-69 ம் ஆண்டு உதைபந்தாட்ட இறுதிப் போட்டி இன்று காங்கேசன்துறை பட்டின சபை விளையாட்டரங்கில் நடைபெற இருக்கிறது.

வலி-வடக்கு காரியாதிகாரி திரு பி. எல்பற்றிஸ் தலைமையில் நடைபெறும் இப்

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி-ஜெயலலிதா
நடித்த
கலாட்டா கல்யாணம்

வெஸ்லி சினிமா
(மானிப்பாய்)
தினசரி6-30, இரவு10-00
பிரிபோயா, போயா 10-30மணி
எம்.ஜி.ஆர்-சரோஜாதேவி
நடித்த
பெரிய இடத்துப் பெண்

ராஜா 130 வது தினம்
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
மாதர்களுக்குஅரைக்கட்டணம்

இணுவில்
ஸ்ரீ காலிங்கன்
தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30 மணி
சிவாஜி-மாலினி
நடித்த
சபாஷ் மீனு

MANOHARA
JAFFNA
Daily
4-45 7-00&9-45 P.M.
HAMBURG
OFFLIMITS

REGAL at JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனடி சேர்ந்த இவரது அந்தியேஷ்டி நாளை மறுதினம் நடைபெறவிருக்கின்றது.

—திரு—

...யும் இதைத்தடுப்பதற்குப் போராடுவோமென்றும் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த சிலரும் வாலிபர்களும் தெரி... மலிருப்பினும், வடபகுதியிலுள்ள ஹரிஜனர்களின் நல்வாழ்விலும் முன்னேற்றத்திலும் கல்வி அமைச்சருக்கும் அரசாங்கத்துக்கும் மட்டுமல்ல பௌத்த காங்... கல்வி இலாகா விளக்கம் தெரிவித்திருக்கிறது.

அதாவது இந்த மூன்று பௌத்த பாடசாலைகளையும் ... மாதம் முதல் திகதி போதனு மொழி... வேண்டுமென்ற அம்சத்தை தமிழ்க்காங்கிரசும் தமிழரசுக் கட்சியினரும் வன்மையாகக் எதிர்...னர். இதற்கு வீட்டு...மொழி மலையகப்பகுதிகளில் இதற்கான ஆரம்ப அறிகுறிகள் தோன்றியுள்ளன. அரசாங்கம் மட்டுமல்ல இந்த நாட்டின் அமைதியை விரும்பும் அனைவரும் முயற்சிசெய்ய வேண்டும்.


**'ஈழநாடு' பத்தாண்டு நிறைவு விழா**

## 26 மைல் மரதன் ஓட்டம்

(14—6—69)

### விண்ணப்பப்பத்திரம்

பெயர்: ..............................

விலாசம்
..............................
..............................

வயது: ..............................
1—6—69

..............................
கையொப்பம்

### போட்டி விதிகள்

1. போட்டியில் பங்கு பற்றுபவர்கள் 1969-ம் ஆண்டு ஜுன் மாதம் 1-ம் திகதியன்று 21 வயதுக்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும். அத்துடன் ஒரு விளையாட்டுச் சங்கத்தில் அல்லது இலங்கை A. A. A. யில் அங்கத்தவராக இருக்க வேண்டும்.

2. போட்டியில் பங்கு பற்றுபவர் ஏதாவது மருந்து குடிப்பவராக இருந்தால் விலக்கப்படத்தக்கவராக இருப்பார். உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்ட வைத்திய அதிகாரிகள் இவர் பங்கு பற்றக்கூடாது என்று தடுத்தால் அவர் போட்டியில் பங்கு பற்ற முடியாது.

3. போட்டியில் பங்கு பற்றுபவர் வீதி விதிகளைக் கவனித்து அதன்படி நடக்கவேண்டும்.

4. போட்டிஅமைப்பாளர்கள் வழங்கும் பானங்களைத் தவிர வேறெதையும் போட்டியில் பங்கு கொள்வோர் எடுத்துச் செல்லவோ, உண்ணவோ கூடாது.

5. போட்டியில் கலந்து கொள்வோர் ஓடும் போது காயம் ஏதாவது ஏற்பட்டால் அதற்கு போட்டி நிர்வாகஸ்தர் பொறுப்பாகமாட்டார்.

6. ஜுன் மாதம் 1-ம் திகதிக்குமுன் ஆறுமாதங்களாக தொடர்ந்து யாழ் மாவட்டத்தில் நிரந்தரமாக இருப்பவர்களே இப்போட்டியில் கலந்து கொள்ள முடியும்.

விண்ணப்பங்கள் யாவும் ஜுன் மாதம் 5-ம் திகதிக்குமுன் 'ஈழநாடு', த. பெ. எண்-49, யாழ்ப்பாணம் என முகவரியிட்டு அனுப்பப்படல்வேண்டும்.



இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் லக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம்ஆண்டு மேமாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


# மலேஷியாவும் இந்தியாவும்

## உலக மேடை

**எஸ். எம். ஜி.**

நாடகமே உலகம், நாளை நடப்பதை யாரறிவார். மேற்கு ஆசியப் பிரச்னை, வியட்நாம் பிரச்னை, கொரியாப்பிரச்னை இப்படி எத்தனையோ உலகப் பிரச்னைகள். இதுதவிர உள்நாட்டுப் பிரச்னைகள் பலப்பல. உள்நாட்டுப்பிரச்னைகள்தான் அயல்நாட்டுப் பிரச்னைகளாகவும் உலகப் பிரச்னைகளாகவும் சில சமயங்களில் வெடித்துக்கிளம்புகின்றன. மலேஷியாவில் நடந்த மூன்ருவது பொதுத் தேர்தலைத் தொடர்ந்துமலாயர்களுக்கும் சீனர்களுக்குமிடையில் ஏற்பட்ட இனக் கலவரம் இன்னும் சரியாகத் தணியவில்லை. இக்கலகத்துக்கு யார் காரணம், எவர் காரணம் என்பது பற்றி ஆராய்வதில் பயனில்லை. ஆனுலும் ஒவ்வொருவரும் பிறர் மீது குற்றம் சுமத்தவே பார்ப்பது இதுபோன்ற சந்தர்ப்பங்களில் வழக்கம்.

மலேஷிய சீனர்களுக்கு வெளிநாட்டு உதவி கிடைக்கிறதென்று மலேஷியப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் கூறியதிலிருந்து நவசீனுவின் உதவி கிடைக்கிறதென்றும் எனவே இக்கலகத்தில் சீனுவுக்கும் பங்கு உண்டு உன்றும் கருதுவதற்கும் வழிகிடைத்திருக்கிறது. சிங்கப்பூர் அரசாங்கம் மலேஷியாவின் உள்விவகாரங்களில் தலையிடுவதாக மற்ருெரு புகார் கூறப்படுகிறது. இது சம்பந்தமாகமலேஷிய அரசாங்கத்துக்கும் சிங்கப்பூர் அரசாங்கத்துக்குமிடையில் குறிப்புகள் பரிமாறப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இக்கலகத்தில் மலேஷியாவிலுள்ள இந்தியர் சிலருக்கும் பங்குண்டென்றும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் துணைப்பிரதமரும் இராணுவச்சட்டத்தை அமுல் நடத்தும் அதிகாரியாக விளங்கும் துன் அப்துல் ரசாக் தெரிவித்திருக்கிருர். அதாவது மலேஷியாவிலிருந்தும் சில இந்தியர் விரைவில் நாடுகடத்தப் படுவார்கள் என்பது இதன் அர்த்தம். ஆபிரிக்க நாடுகள் சிலவும் பர்மாவும் இந்தியர்களை நாடுகடத்தத் தொடங்கியது. இலங்கையிலிருந்தும் ஐந்தேகால் லட்சம் பேர் வெளியேற வேண்டும். பாகிஸ்தான் பிரச்னையும் தனி எனவே மலேஷியாவின் உள்நாட்டுப்பிரச்னை இந்தியாவுக்கும் தலையிடி. சிங்கப்பூர், சீனுவும் இதில் சம்பந்தப்பட்டு சர்வதேச உறவில் நெருக்கடி தோன்ற இடமுண்டு.

### இந்திய ஜனதிபதி

டாக்டர் சாகீர் ஹுசைனின் மறைவுக்குப் பின்னர் இந்தியாவின் புதிய ஜனதிபதியாக யார் தெரிவுசெய்யப்படுவார் என்ற சர்ச்சை உடனடியாகவே தோன்றிய போதிலும் அப் பதவிக்குத் தெரிவு செய்யப்படக்கூடியவர்கள் என்று எழுந்த சில பெயர்கள், அந்தபெயருக்குரியவர்களே மறுத்துவிட்டபடியால் இப்பொழுது ஜோதிடமும் தலைகாட்டியிருக்கிறது. ஹரிஜனத்தலைவர் டாக்டர் ஜகஜீவன்ராம் தாம் ஜனதிபதிப் பதவிக்கு போட்டியிடப்போவதில்லையெனத்தெரிவித்துவிட்டார். சர்வோதய இயக்கத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணும் அந்தப் பதவி தமக்கு வேண்டாம் என்று சொல்லிவிட்டார். இந்தியாவின் இன்றைய பிரதமர் இந்திராகாந்திதான் அடுத்த ஜனதிபதியாவாரென்றும் இப்போதைய துணைப்பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் பிரதமராவாரென்றும் ஜோதிடர் ஒருவர் கூறியதுபற்றி இந்திரா குறிப்பிடுகையில் தமக்கு ஜோதிடத்தில் நம்கையில்லையென்று தெரிவித்துவிட்டார்.

ஜனதிபதி ஒரு கட்சிப் பிரச்னையல்லவென்று பிரதமர் இந்திரா பெருந்தன்மையுடன் கூறியிருக்கிருர். முன்னர் டாக்டர் ஹுசைனுடன் போட்டிக்கு நிறுத்திய முன்னுள் பிரதம நீதியரசர் டாக்டர் சுப்பராவை எதிர்க் கட்சியினர் இம்முறைநிறுத்துவார்களா என்பது சந்தேகமே.

எப்மடியானுலும் இப்போது தற்காலிக ஜனதிபதியாகக் கடைகையாற்றும் திரு. வி. வி. கிரி புதிய ஜனதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார் என்று எதிர்பார்ப்பதற்கு இடமுண்டு.

### தமிழ்நாடு அமைச்சரவை

தமிழ்நாடு முதல்அமைச்சரும் தி. மு. க. தலைவருமான அறிஞர் அண்ணுகாலமான பின் முதல் அமைச்சர் பொறுப்பேற்ற கலைஞர் மு. கருணநிதி, "இவர் சமாளிப்பாரா?" என்று சந்தேகம் கொண்டவர்களும் வியக்கும் வண்ணம் பல பிரச்னைகளையும் சமாளித்து வெற்றிகரமாகச் செயலாற்றி வருகிருர். ஸ்ரீநேரு மறைந்த பின் இந்திய மத்திய அரசாங்கம் பல பிரச்னைகளையும் சமாளிக்காமல் தட்டிக் கழித்து வருவதுபோல் திரு. கருணநிதியின் அரசாங்கம் தட்டிக் கழிக்கவில்லை. தமிழக உணவு விவசாய அமைச்சராக இருந்த திரு. கோவிந்தசாமி மரணமடைந்ததும் அந்த அமைச்சர் பதவியை யாருக்குக் கொடுப்பதென்பதில் சில சர்ச்சைகள் தோன்றியிருக்க வேண்டும் இது எங்கும் உள்ள பிரச்னைதான். இந்தியாவிலுள்ள பல ராஜ்யங்கள் பலரையும் திருப்திப்படுத்துவதற்காக மந்திரிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதுபோல திரு. கருணநிதியும் அதிகரிக்காமல் திரு. கோவிந்தசாமியின் அமைச்சுப் பொறுப்பைப் பங்கிட்டுக் கொடுத்திருப்பதும், கேரள முதலமைச்சருடன் தண்ணீர் விநியோக ஒப்பந்தம் செய்திருப்பதும் காமராஜர் உட்பட சாங்கிரஸார் சுமத்தும் குற்றச்சாட்டுகளுக்கு அவர்களின் அறிக்கை மூலமே பதிலடி கொடுப்பதும் கருணநிதியின்திறமைக்குச்சான்றுகள்

---

சாவகச்சேரி, வெள்.

கைதடி நுணுவில் சனசமூக நிலைய மண்டபத்தில் கைதடி நுணுவில் தையல் நிலைய ஆண்டுவிழாவும் கைப்பணி வீட்டுப் பணிகளின் விற்பனவும் இன்று காலை 9 மணி முதல் நடைபெறும். சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

...துறைப் பகுதி விளையாட்டுச் சங்கம் நடத்தும் 68-69 ம் ஆண்டு உதைபந்தாட்ட இறுதிப் போட்டி இன்று காங்கேசன்துறை பட்டின சபை விளையாட்டரங்கில் நடைபெற இருக்கிறது.

வலி-வடக்கு காரியாதிகாரி திரு பி. எல்பற்றிஸ் தலைமையில் நடைபெறும் இப்போட்டிக்கு காங்கேசன் துறை பொலிஸ் தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு ஆர். ஹெரத் பிரதம விருந்தினராக் கலந்து கொள்வார்.



MANOHARA
JAFFNA
Daily
4-45 7-00&9-45 P.M.
HAMBURG
OFFLIMITS

REGAL at JAFFNA
Daily 4-45, 7 &9-45 p m.
Julie Andrews &
Dick van duke
in
MARY POPPINS

ராணி
[யாழ்ப்பாணம்]
[தினசரி 3காட்சிகள்]
* ஜெமினி
* சாவித்திரி
நடித்த
பிரேம பாசம்
(புதிய கொப்பி)

இங்ஸ்லி (கொழும்பு) அயின் (மன்னர்)
மற்றும் சினிமாஸ் திரைகளில்
நாகேஷ் - சுந்தரராஜன்-வசந்தா- மனேரமா
நடித்த
ஆலயம்

இப்பொழுது நடைபெறுகிறது
கெப்பிட்டல் பிளாஸா மைலன்
(கொழும்பு)
விஜயா (மட்டுநகர்) ஸ்ரீ கிருஷ்ண (திருமலை) வெலிங்டன் (யாழ்நகர்)



ரவிச்சந்திரன் - காஞ்சனு - நாகேஷ்
நடிக்கும்
அதே கண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org